வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu




Email : news@eelanadu.lk | மலர் : 04 | 23.03.2023 வியாழக்கிழமை | இதழ் : 104 | பக்கங்கள் : 16

# அரசியல் வேறுபாடுகளை புறந்தள்ளி நாட்டை மீட்பதற்கு ஆதரவளியுங்கள்!

## எதிர்க்கட்சிகளுக்கு ஜனாதிபதி அழைப்பு

● மக்களுக்கான பலன் விரைவில்



கொழும்பு, மார்ச் 23

**நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் நோக்கில் அரசியல் வேறுபாடுகளை புறந்தள்ளி சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கையை நடைமுறைப்படுத்த ஆதரவளிக்க வேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிகளிடம் கோரிக்கை விடுத்தார்.**

பாராளுமன்றில் ஜனாதிபதி தேசிய அரசாங்கம் அமைக்க அழைப்பு விடுப்பார் என்று தெரிவிக்கப்பட்டிருந்த நிலையிலேயே எதிர்க்கட்சிகளிடம் அவர் இந்தக் கோரிக்கையை விடுத்திருந்தார்.இந்த நிலையில் பின்னர் உரையாற்றிய ஹர்ச டி சில்வா ஜனாதிபதிக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் உரையாற்றியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

அத்துடன், கடந்த கால தவறுகள் மீண்டும் நிகழாத வகையில் சட்ட திட்டங்களையும் பின்னணியையும் ஏற்படுத்தி நாடு கட்டியெழுப்பப்படும். தற்போதைய கடின உழைப்பு மற்றும் அர்ப்பணிப்பின் பலன் மக்களுக்கு விரைவில் கிடைக்கும் எனவும் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்படுத்திக்கொண்ட இணக்கப்பாடுகளை, இன்று சபையில் சமர்ப்பித்த ஜனாதிபதி, ஆறு மாதங்களுக்கு ஒருமுறை சர்வதேச நாணய நிதியத்துடன் குறித்த செயல் திட்டத்தை மீளாய்வு செய்யப்படும் என்றும் கூறினார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தை நேற்று பாராளுமன்றில் சமர்ப்பித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விசேட உரையாற்றினார். இதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், பற்றி எரிந்து கொண்டிருந்த ஒரு நாட்டையே ஜூலை 9 ஆம் திகதி நான் பொறுப்பேற்றேன். குழப்பத்தில் இருந்த நாடு. நாளைய

15

## 33,000 ஆசிரியர்களுக்கு மே மாதம் நியமனம்!

கொழும்பு, மார்ச் 23

பட்டதாரிகள், கல்வியியல் கல்லூரியில் பயின்றவர்கள் என 33 ஆயிரம் பேருக்கு வரும் மே மாதம் ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்படும் என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

இதேநேரம், 26 ஆயிரம் பட்டதாரிகளை ஆசிரியர் சேவையில் இணைத்துக் கொள்வதற. கான பரீட்சை நாளை மறுதினம் சனிக்கிழமை நடைபெறவுள்ளது. இதற்காக, நாடளாவிய ரீதியில் 141 பரீட்சை

15

## மின்சாரம் தாக்கி இளைஞர் மரணம்!

வடமராட்சி, மார்ச் 23

சிற்ப வேலையில் ஈடுபட்டிருந்த இளைஞர் ஒருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார்.

வடமராட்சி - உடுப்பிட்டியில் நேற்று மாலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் காரைநகரை சேர்ந்த குமாரசுவாமி சுதன் (வயது 27) என்பவரே உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

உயிரிழந்த இளைஞர், உடுப்பிட்டியில் வீடு ஒன்றில் சிற்ப வேலையில் ஈடுபட்டிருந்தார்.

15

## உடலில் மாற்றம் ஏற்பட்டால் எச்சரிக்கையாக இருங்கள்!

கொழும்பு, மார்ச் 23

உங்கள் உடலில் புதிய அடையாளங்கள் அல்லது புள்ளிகள் தென்பட்டால் எச்சரிக்கையுடன் இருக்குமாறு சுகாதார மேம்பாட்டு பணியகம் அறிக்கை மூலம் தெரிவித்துள்ளது.

நாட்டில் அண்மைக் காலமாக தொழுநோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் அவசரமாக சுகாதார ஆலோசனைகளை பெற்றுக் கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, நாட்டில் வருடாந்தம் சுமார் 1,500 தொழுநோயாளிகள் இனங்காணப்படுகின்றனர். இவர்களில் 15வீத நோயாளிகள்

15

## நீர்வீழ்ச்சியில் மாயமான 4 இளைஞர்களும் மரணம்!

கல்முனை, மார்ச் 23

எல்லேவல நீர்வீழ்ச்சியில் நீராடியபோது நீரில் மூழ்கி காணாமல் போன ஏனைய மூன்று இளைஞர்களின் சடலங்களும் நேற்று புதன்கிழமை மீட்கப்பட்டன.

கல்முனை, சாய்ந்தமருதை சேர்ந்த 10 இளைஞர்கள் மொனராகலை - வெல்லவாய - எல்லேவல நீர்வீழ்ச்சிக்கு சுற்றுலாவாக சென்றிருந்தனர். நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இவர்கள் நீர்வீழ்ச்சியில்

15



வரலாற்று பிரசித்தி பெற்ற மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தின் கொடியேற்றத் திருவிழா நேற்று இடம்பெற்றவேளை....!

## ஐ. எம். எவ்வை நாடுவதற்கு ரணிலை காட்டியவர் பஸிலே!

### ஆளும் கட்சி சொல்கிறது

கொழும்பு, மார்ச் 23

சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத் திட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் பணியை ரணில் விக்கிரமசிங்கவிடம் ஒப்படைக்குமாறு பஸில் ராஜபக்ஷவே பரிந்துரை செய்தார் என்று ஆளும் கட்சி தெரிவித்துள்ளது.

ஆளும் கட்சியான சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியை

15

## 33 கோடி டொலர்கள் நேற்று கிடைத்தன!

கொழும்பு, மார்ச் 23

சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் கீழ் முதல் தவணையாக 33 கோடி டொலர்கள் நேற்று கிடைக்கப்பெற்றன என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியாம்பலபிட்டிய தெரிவித்தார்.

நாணய நிதியம் அளித்த இந்த நிதியை நாட்டின் தேவைக்கு பயன்படுத்துவதற்காக திறைசேரிக்கு

15

## ரமழான் நோன்பு நாளை ஆரம்பம்!

கொழும்பு, மார்ச் 23

புனித ரமழான் நோன்பு பெருநாள் நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகும் என்று கொழும்பு பெரிய பள்ளிவாசல் அறிவித்துள்ளது.

ரமழான் மாத்துக்கான தலைப்பிறை தென்படவில்லை. இந்நிலையில், ஷபான் மாதத்தை 30 நாட்களாக பூர்த்திசெய்ய தீர்மானித்துள்ளதாகவும் பெரிய பள்ளிவாசல் தெரிவித்தது. (ஐ)

## உள்நோக்க கடிதத்தை ஜனாதிபதி தரவில்லை!

### ஹர்ச டி சில்வா எம். பி. சாடல்

கொழும்பு, மார்ச் 23

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மூன்று ஆவணங்களை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார் என்று கூறிய போதிலும் சர்வதேச நாணய நிதியத்தின்

15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

முன்னரும் ஒரு தடவை இந்தப் பத்தியில் அதுபற்றி எழுதியிருக்கின்றேன். கிறிஸ்தவ போதகர்கள் யாழ்ப்பாணத்தில் இயேசுவின் பெயரை சொல்லி நடத்தும் சபைகள் 'மழைக்குப் பெய்த காளான்கள்போல' முளைவிடுவது சைவர்களை மாத்திரமல்ல, றோமன் கத்தோலிக்கர்களையும் பாதிப்பது குறித்து சில மாதங்களுக்கு முன்னர் இந்தப் பத்தியில் குறிப்பிட்டிருந்தேன்.

அதன் தாக்கம் எந்தளவுக்கு இப்போது போயிருக்கிறது என்பதை டான் ரீவி குழுமத் தலைவர் குகநாதன் அண்மையில் ஒரு சம்பவத்தை இந்த ஊர்க்குருவியுடன் பகிர்ந்து கொண்டபோது அறியமுடிந்தது.

டான் ரீவியின் பெண் அறிவிப்பாளர்களில் அவரும் ஒருவர். அவரது சகோதரியில் சில மாற்றங்கள். அவர் வீட்டில் இவருக்கு பேய் பிடித்துவிட்டது என்ற நினைப்பில் ஒரு போதகரிடம் அழைத்துச் சென்றனர்.

அவரும் சில நாள் போதனையின் பின்னர் பேயைக் கலைத்துவிட்டதாக நம்பவைத்திருக்கிறார்.

வயிறு வலிக்கிறது என்று அழுதுகொண்டிருக்கும் குழந்தை ஒன்று டாக்டரிடம் சென்று அவர் பரிசோதனை செய்த பின்னர் டாக்டரின் அறையிலிருந்து வெளியே வந்ததும் தனக்கு இப்போது வயிற்று வலி நின்றுவிட்டது என்று சொல்வதுபோல. பிள்ளைக்கு இன்னமும் டாக்டர் எழுதிக்கொடுத்த மருந்துகூட வாங்கிக் கொடுக்கவில்லை. ஆனால், பிள்ளைக்கு வலி போய்விடும். ஏனெனில், பிள்ளை டாக்டரைப் பாத்ததும் தனக்கு சரியாகிவிடும் என்று நம்புவது போலத்தான், இந்த போதகர் பேய் கலைத்ததும்.

ஆனால், அந்தக் குடும்பமே இப்போது அந்த போதகரின் சபையில் 'வாடிக்கையாளர்கள்' ஆகிவிட்டனர்.

டான் ரீவியில் செய்தி வாசிக்கும் அந்த அறிவிப்பாளர், சில வேளைகளில் ஓம் ரீவியிலும் செய்தி வாசிப்பதுண்டு. ஆனால், அந்த பெண் அறிவிப்பாளரோ இப்போது, தான் ஓம் ரீவியில் செய்தி வாசிக்க மாட்டேன் என்று விட்டாராம். காரணம் கேட்டபோது போதகர் விடுத்த கட்டளை அது என்பது தெரிய வந்தது.

மானிப்பாயில் நாளை வெள்ளிக்கிழமை முதல் இரண்டு நாட்களுக்கு ஆசீர்வாத கூட்டம். தமிழகத்திலிருந்து போல் தினகரன் குடும்பத்தினர் வருகை தருகின்றனர்.

செய்தி அறிந்ததும், இலங்கை சிவசேனை தலைவர் மறவன் புலவு சச்சிதானந்தம் யாழ்ப்பாண பிரதி பொலிஸ் மா அதிபருக்கு கடிதம் எழுதுகின்றார்.

'தமிழகத்திலிருந்து உல்லாசப் பயண வீசாவில் வரும் தினகரன் இப்படியொரு வைபவத்தில் கலந்துகொண்டு பேசுவது குடிவரவு - குடியகல்வு சட்டவிதிகளுக்கு முரணானது. அது மாத்திரமின்றி அவர்கள் மத மாற்ற முயற்சியில் ஈடுபடவிருக் கிறார்கள். அப்படி ஈடுபடுகின்ற போது அங்கே மதக் கலவரங்கள் வெடிக்கலாம். எனவே, அதனை தடுத்து நிறுத்துங்கள்' என்று கேட்கிறார். பொலிஸ் அதிகாரியும் நடவடிக்கை எடுப்பதாக உறுதியளிக்கிறார்.

ஒருவர் மதம் மாறுவதற்கு விரும்புகின்றபோது அதனை தடுப்பதற்கு யாருக்கும் உரிமை இல்லைத்தான், ஆனால் அதே போல இன்னுமொரு மதத்தை அவர்கள் நம்புகின்ற கடவுளை இழிவுபடுத்துவதும் அதேபோல ஏற்றுக்கொள்ள முடியாதது தான்.

தமிழகத்தில் உள்ள இந்துக் கோவில்களை எல்லாம் சாத்தான்களின் கோவில்கள் என்று கூறுகின்றவர்கள் இவர் போன்றவர்கள்.

மட்டக்களப்பில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி மூன்று தினங்களுக்கு மாபெரும் ஆசீர்வாதப் பெருவிழா நடக்கவிருப்பதாக மற்றுமொரு தகவல். அது நடப்பது மாத்திரமல்ல, நடக்கின்ற இடமே சர்ச்சைக்குரியதாகியிருக்கின்றது.

மதமாற்ற முயற்சியில் ஈடுபடுகின்ற ஒரு சபையின் விழா நடக்கவிருந்த இடம் மட்டக்களப்பு இந்துக் கல்லூரி மைதானம்.

இதனால் மட்டக்களப்பின் சைவ அமைப்புகள், அபிமானிகள் ஒன்றுதிரண்டு அதற்கு எதிராக எதிர்வினையாற்றிய போது, வேறு வழியின்றி கல்லூரி முதல்வர் மைதானத்தை வழங்க மறுக்கவேண்டியதாகியது.

மைதானத்தை வழங்குவதற்காக கட்டணத்தையும் வாங்கிவிட்டு இப்போது கல்லூரி முதல்வர் மைதானத்தை தர மறுப்பதாக அந்த கிறிஸ்தவ சபை பொலிஸில் முறையிட்டதனால் விவகாரம் நீதிமன்றம் வரை சென்றது.

விசயம் மட்டக்களப்பில் சைவர்களிடையே சர்ச்சையாகியபோதுதான் கல்லூரி முதல்வர், பிரதமர் அலுவலகம் செய்த சிபாரிசின் பேரிலேயே மைதானத்தை கொடுக்க முன்வந்த விடயம் வெளிச்சத்துக்கு வந்தது.

பௌத்த அடையாளங்களை வடக்கு - கிழக்கு எங்கும் நிறுவுவதில்தான் தெற்கின் ஆட்சியாளர்கள் குறியாக இருக்கின்றனர் என்றால், இது போன்ற கிறிஸ்தவ சபைகளையும் வளர்த்துவிடுவதிலும் அக்கறையாக இருக்கின்றனரோ என்று எண்ணாமலும் இருக்கமுடியவில்லை.

தமிழர்களை - சைவர்களை பௌத்தர்களாக மாற்ற முடியாது என்பதால் கிறிஸ்தவர்களாக மாற்ற முயற்சிக்கின்றனரோ?

**- ஊர்க்குருவி**

## "கிறிஸ்தவ மத கூட்ட நிறுத்தம் மட்டு. இந்துவுக்கு மிரட்டல்!"

*யாழ்ப்பாணம், மார்ச் 23*

மட்டக்களப்பு இந்துக் கல்லூரி நிர்வாகத்தை மிரட்டும் முயற்சியில் ஈடுபட்டுள்ள கிறிஸ்தவ அமைப்பை கண்டிப்பதாக அகில இலங்கை சைவ மகா சபை தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அகில இலங்கை சைவ மகா சபை வெளியிட்ட அறிக்கை யில்,

"மட்டக்களப்பு இந்துக் கல்லூரியில் நடைபெற இருந்த மத மாற்ற பிரசாரக் கூட்டம் சைவ அமைப்புக்களின் அழுத்தத்தை அடுத்து பாடசாலை சமூகத்தால் நிறுத்தப்பட்டது அறிந்ததே. தற்போது நிகழ்வு நடத்துவதற்கு அனுமதி அளிக்காவிட்டால் 5 கோடி ரூபாய் நட்டஈடு கேட்டு வழக்கு தொடரப்படும் என கிறிஸ்தவ கூட்டமைப்பு எனும் அமைப்பு எச்சரித்துள்ளது.

"இந்தத் தருணத்தில் பாடசாலை சமூகத்துக்கும் மட்டக்களப்பு சைவ சமயிகளுக்கும் எமது பூரண ஆதரவை வெளிப்படுத்துகின்றோம். இவ்வாறான செயல்கள் மத நல்லிணக்கத்துக்கு பாரதூரமான பங்கத்தை ஏற்படுத்தும் என்பதையும் சுட்டி காட்டுகின்றோம்.

தொடர்ச்சியாக சைவ சமய விழுமியங்களை சுதேச சிவபூமியில் அன்பே உருவான எம் பரம்பொருள் தமிழர் கண்ட பிரபஞ்ச இயக்க சிவ வடிவம் நடராசர் சிலை திறப்பை விமர்சித்து பத்தி எழுதி வரும் ஊடகவியலாளர் ஒரு தொகுதியினர் மத மாற்ற கும்பல்கள் வெளிநாடுகளிலிருந்து போதகர்களை மிக பெரும் நிதி செலவுடன் கொண்டு வந்து சுதேசிகளை மத மாற்ற முற்படும் செயலைப் பற்றிய வாய்திறக்காதது மிகுந்த விசனத்தையும் தோற்றுவிக்கின்றது. தமிழ்ச் சைவர்களின் கரிசனைகள் தொடர்ந்து உதாசீனம் செய்யப்பட்டு ஆழமான மன வடுக்கள் தோற்றுவிக்கப்பட்டால் அதன் விளைவுகள் பற்றி காரணமான சகலரும் இந்த சந்தர்ப்பத்தில் சிந்திக்குமாறு மீள வலியுறுத்துகின்றோம்", என்றுள்ளது. (ஐ)

## தேசிய வெசாக் விழாவை கொண்டாட சிறப்பு ஏற்பாடு!

*கொழும்பு, மார்ச் 23*

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கு அமைவாக இந்த வருட வெசாக் பண்டிகையை தேசிய மட்டத்திலும், பிரதேச மட்டத்திலும் வெகு விமரிசையாகக் கொண்டாட திட்டமிட்டுள்ளதாக ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

"புத்த ரஷ்மி தேசிய வெசாக் பண்டிகை" தொடர்பில் ஜனாதிபதி பணிமனையில் இடம்பெற்ற பூர்வாங்க கலந்துரையாடலின் போதே ஜனாதிபதியின் செயலாளர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஹுனுபிட்டிய, கங்காராமை விகாராதிகாரி கலாநிதி கிரிந்தே அஸ்ஸஜி தேரர் மற்றும் கலாநிதி பல்லேகம ரதனசார தேரர் ஆகியோர் இந்த கலந்துரையாடலில் கலந்து கொண்டனர். அத்துடன், ஜனாதிபதியின் ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்கவும் கலந்து கொண்டார்.

"புத்த ரஷ்மி தேசிய வெசாக் பண்டிகை" 2023 மே மாதம் 05, 06 மற்றும் 07 ஆகிய திகதிகளில் கொழும்பில் உள்ள கங்காராம விகாரை, ஜனாதிபதி அலுவலகம் மற்றும் பிரதமர் அலுவலக வளாகத்தில் நடைபெற உள்ளது.

தேசிய வெசாக் வலயமாக பெயரிடப்பட்டு பல நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என்று கிரிந்தே அஸ்ஸஜி தேரர் தெரிவித்தார். மே மாதம் 05 ஆம் திகதி இடம்பெறும் வெசாக் பௌர்ணமி தினத்தன்று, கங்காராமை விகாரையில் சில் பெறும் சம்பிரதாயத்துடன் ஆரம்பித்து, வெசாக் வலயக் கொடிகள், பதாதைகள், வெசாக் கூண்டுகள் மற்றும் மின்விளக்கு அலங்காரங்கள், மலர் பெரஹரா நடத்துதல், உள்ளிட்ட பல நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்படவுள்ளன.

பௌத்த கீதம் இசைத்தல், ஜனாதிபதி அலுவலகம் மற்றும் கங்காராம விகாரையின் பிரதான மேடைக்கு அருகாமையில் நடைபெற இருப்பதோடு, கங்காராம விகாரைக்கு அருகாமையிலும், ஜனாதிபதி அலுவலகத்திற்கு அருகாமையிலும் வெசாக் அன்னதான நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

நல்ல நோக்கத்துடன் ஏற்பாடு செய்யப்படும் இவ்வருட "புத்த ரஷ்மி தேசிய வெசாக் பண்டிகை" ஒரு முன்மாதிரியான வெசாக் பண்டிகையாக இருக்கும் என்றும் கிரிந்தே கிரிந்தே அஸ்ஸஜி தேரர் தெரிவித்தார்.

"புத்த ரஷ்மி வெசாக் வலயத்தை" வெற்றியடையச் செய்வதற்கு அரச துறை மற்றும் தனியார் துறையினர் அனைவரினதும் ஆதரவைப் பெற எதிர்பார்த்துள்ளதாகவும், அதற்காக அனைவரும் ஒத்துழைப்பு வழங்குவார்கள் என்றும் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க மேலும் தெரிவித்தார்.

(ஐ)

## பாடசாலைகளுக்கான வெட்டுப்புள்ளி வெளியீடு

*கொழும்பு, மார்ச் 23*

பாடசாலைகளில் 6 ஆம் தரத்துக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான வெட்டுப் புள்ளிகள் நேற்று வெளியாகின.

புலமைப்பரிசில் பரீட்சையின் அடிப்படையில் வெளியான இந்த வெட்டுப்புள்ளிகள் அல்லது அதற்கு மேல் புள்ளிகளை பெற்ற மாணவர்கள் பாடசாலைகள் கிடைக்காத அல்லது வேறு நியாயமான காரணங்களுக்காக தமக்கு கிடைத்த பாடசாலையை மாற்ற விரும்பும் மாணவர்கள் இது தொடர்பான மேன்முறையீடுகளை சமர்ப்பிக்கலாமென அறிவிக்கப்பட்டுள்ளது.

மேன்முறையீடுகளை "ஒன்லைன்" முறைமையிலோ கல்வியமைச்சிடமோ சமர்ப்பிக்க வேண்டுமென்றும் கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, யாழ்ப்பாணத்தில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 148, யாழ். மத்திய கல்லூரி 144, வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை 154, சாவகச்சேரி இந்துக் கல்லூரி 143 வெட்டுப்புள்ளிகள் அறிவிக்கப்பட்டுள்ளன. (ஐ)

## நெடுந்தீவில் சனியன்று நடமாடும் மருத்துவ சேவை

*யாழ்ப்பாணம், மார்ச் 23*

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையினரால் நெடுந்தீவில் நடமாடும் மருத்துவ சேவையை முன் னெடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன் முதல் கட்டமாக நெடுந்தீவு பிரதேச மருத் துவமனையில் நாளைமறுதினம் சனிக்கிழமை மருத் துவ முகாம் நடைபெறவுள்ளது.

இதில் யாழ். போதனா மருத்துவமனையின் மருத்துவ நிபுணர்கள், துறைசார் மருத்துவ அதிகாரிகள் மற்றும் சம்பந்தப்பட்ட ஏனைய உத்தியோகத்தர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த மருத்துவ முகாமில் கண்புரை சத்திர சிகிச்சை மேற்கொள்ள வேண்டியவர்களை இனங் காணும் பரிசோதனையும் இடம் பெறவுள்ளது.

எனவே, நெடுந்தீவுப் பிரதேசத்தைச் சேர்ந்த பொதுமக்கள் மேற்படி மருத்துவ முகாமில் பங்கு பற்றி பயன்பெறுமாறு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார். (ஐ)

Eelanadu
23.03.2023 வியாழக்கிழமை
பிலவ வருடம், பங்குனி 08

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# முன்னணி கூறவருவது என்ன?

அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் (தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின்) பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் அமெரிக்கா இலங்கைக்கு சலுகைகளை வழங்குவதாகவும் சீனாவின் ஆதிக்கத்தை குறைப்பதே இதற்கு பின்னாலுள்ள நோக்கமென்று தெரிவித்திருக்கின்றார். சர்வதேச நாணய நிதியத்தின் உறுதியளிக்கப்பட்ட கடன் தொகையில் ஒரு பகுதி வழங்கப்பட்டிருக்கின்ற நிலையிலேயே முன்னணி அதன் நிலைப்பாட்டை வெளிப்படுத்தியிருக்கின்றது. இதன் மூலம் முன்னணியினர் கூறவருவது என்ன? சீனாவின் ஆதிக்கம் குறைவது தொடர்பில் கவலைப்படுகின்றனரா அல்லது அமெரிக்காவின் செல்வாக்கு அதிகரிப்பது தொடர்பில் அதிருப்தியடைகின்றனரா? அமெரிக்காவின் செல்வாக்கு அதிகரிப்பதை முன்னணியால் சகித்துக்கொள்ள முடியவில்லையா?

சர்வதேச நாணய நிதியத்தின் உதவியில்லாமல் இலங்கை அடுத்த கட்டத்தை நோக்கி நகர முடியாதென்னும் நிலையில்தான் மூச்சு விடுவதற்கு தற்போது அவகாசம் கிடைத்திருக்கின்றது. வரி அதிகரிப்பு தொடர்பில் சில மாறுபட்ட அபிப்பிராயங்கள் இருந்தாலும்கூட, சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவி தவிர்க்கவே முடியாதது. இவ்வாறான விடயங்களை வழமையான தமிழ்த் தேசிய அரசியல் கண்கொண்டு மட்டும் நோக்க முடியுமா? நிச்சயம் அவ்வாறு நோக்குவது சரியானதோர் அவதானமல்ல.

அமெரிக்கா திரைமறைவில் இரகசிய நடவடிக்கைகளில் ஈடுபடுவதான கதைகளையே தென்னிலங்கையின் கடும்போக்குவாத அரசியல்வாதி களான விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில போன்றவர்களும் கூறி வருகின்றனர். அண்மையில், அமெரிக்க உளவுத் துறையின் தலைவர் கொழும்புக்கு விஜயம் செய்ததாகக்கூட அவர்கள் பிரசாரங்களில் ஈடுபட்டனர். ஆனால், அவைகள் உறுதிப்படுத்தப்படவில்லை. விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில போன்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் பேசுவது பொருத்தமானதல்ல.

பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வது தமிழருக்கும் தேவையான விடயமாகும் - அது சிங்கள மக்களுக்கு மட்டும் உரியதல்ல. ஆனால், அதற்கப்பால் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும், அதற்கான அழுத்தங்களையும் அமெரிக்க வழங்க வேண்டு மென்று வாதிட்டால் அது சரியானது.

சீன - அமெரிக்க முரண்பாடுகள் உலகம் தழுவிய ஒன்று. அதனை வெறுமனே இலங்கைக்குள்ளும் தமிழர் பிரச்னையோடும் குறுக்கக் கூடாது. உலகம் தழுவிய அதிகார மோதலில் அமெரிக்கா அதன் நலன்களை பாதுகாக்கவும் சீனா அதன் நலன்களை பாதுகாக்கவும் ஒருவருடன் ஒருவர் மோதவும், ஒருவரை மற்றவர் வெல்வதற்கும் எவற்றை யெல்லாம் செய்ய வேண்டுமோ, அவை அனைத்தையும் அவர்கள் செய்வார்கள். அதனை எவராலும் தடுக்க முடியாது. தமிழர்களோ, சிங்களவர்களோ இந்த விடயத்தில் ஒரு பொருட்டல்ல. ஆனால், சிங்கள மக்களை பெரும்பான்மையாக கொண்டிருக்கும் நாட்டில், சிங்களவர்களை கருத்தில் கொண்டுதான் அவர்களின் அணுகுமுறைகள் அமைந் திருக்கும். மேற்குலகின் அணுகுமுறைகள் - வெறுமனே மனித உரி மைகள் கோரிக்கைகளோடு சுருங்கிவிடாமல் அதற்கும் அப்பால் - தமிழர் பிரச்னையின் மீதான கரிசனையை பாதுகாப்பதும் வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்வதும் தமிழ் மக்களின் தலைமைகள் என்போரின் கடமையாகும்.

# தமிழருக்கு விடிவு வேண்டி சிவநாம உச்சாடனம்!

*யாழ்ப்பாணம், மார்ச் 23*

உலக நன்மை வேண்டியும் - இலங்கை வாழ் தமிழ் மக்களின் விடிவு வேண்டியும் சிவ நாம ஜெபம் (ஓம் நமசிவாய நம) கோடி தடவை உச்சாடனம் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இல. 51 பலாலி வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்து சமயப் பேரவையில் எழுந்தருளி அருள் பாலிக்கும் நடராஜர் ஆலயத்தில் தினமும் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரையும் மாலை 6 மணி தொடக்கம் இரவு 9 மணி வரையும் இந்த ஜெபம் நடைபெற்று வருகின்றது.

இந்த நிகழ்வில் தினமும் பங்குபற்றி உலக நன்மைகளோடு இஷ்டசித்திகளையும் பெற்றுக் கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.

(ஐ)

# ‘குருதி கழுவிய குவலயம்’ திருப்பாடுகளின் நாடகம்!

*யாழ்ப்பாணம், மார்ச் 23*

திருமறை கலாமன்றத்தால் அரை நூற்றாண்டை கடந்து வரலாற்றுப் பாரம்பரியத்துடன் தொடர்ச்சியாக ஆண்டுதோறும் கிறிஸ்தவர்களின் தவக்காலத்தில் மேடையேற்றப்பட்டு வருகின்ற திருப்பாடுகளின் நாடகம், இந்த ஆண்டு “குருதி கழுவிய குவலயம்“ என்னும் பெயரில் எதிர்வரும் 30ஆம் திகதி வியாழக்கிழமை முதல் ஏப்ரல் மாதம் 02ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை வரை நான்கு நாள்க ளுக்கு மாலை 6. 45 மணிக்கு இல.238, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் மேடையேற்றப்படவுள்ளது.

திருமறைக் கலாமன்றம் தனது அனைத்து வளங்களையும் ஒருங்கிணைத்து பிரமாண்டமான படைப்பாக தயாரித்து அளிக்கும் திருப்பாடுகளின் நாடகத்தை ஆண்டுதோறும் இலங்கையின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் பல்லாயிரக்கணக்கான மக்கள் பார்வையிட்டு வருகின்றார்கள்.

திருப்பாடுகளின் நாடகமரபில் தனக்கென்றொரு தனித்துவத்தை தக்கவைத்திருக்கும் திருமறைக் கலாமன்றம் இந்த ஆற்றுகையை காலத்திற்கேற்ற அரங்க நுட்பங்களை - சிந்தனைகளை உள்வாங்கி புதிய புதிய பார்வைகளுடன் மேடையேற்றி வந்துள்ளது. இம்முறை மேடையேற்றப்படும் “குருதி கழுவிய குவலயம்“ முதன் முதலாக 1999 ஆம் ஆண்டிலும் அதன் பின்னர் 2005ஆம் ஆண்டிலும் மேடையேற்றப்பட்டது. தற்போது 18 ஆண்டுகள் கடந்து மீண்டும் மேடையேற்றப்படுகின்றது.

திருமறை கலாமன்றத்தின் ஸ்தாபக இயக்குநர் அமரர் நீ. மரியசேவியர் அடிகளார் திருப்பாடுகளின் நாடகப் பாரம்பரியத்தை தமிழ் மரபுக்குரிய தனித்துவங்களுடன் வளர்த்து வந்துள்ளார். திருப்பாடுகளின் நாடகத்துக்கான பெரும்பாலான பிரதிகளை நீ. மரியசேவியர் அடிகளாரே எழுதியிருந்தாலும் சில பிரதிகளை மன்றத்தின் பிரதி இயக்குநர் யோ.யோண்சன் ராஜ்குமாரும் எழுதியுள்ளார். “குருதி கழுவிய குவலயம்“ நாடகப் பிரதியை யோண்சன் ராஜ்குமாரே எழுதியுள்ளதுடன், அவரே இதற்கான நெறியாள்கையையும் மேற்கொள்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

வழமை போலவே பிரமாண்டமான அரங்க அமைப்பு, காட்சியமைப்பு, இசையமைப்பு, ஒலி,ஒளி போன்றவற்றுடன் அரங்கிலும் அரங்கப் பின்னணியிலுமாக இருநூறுக்கும் அதிகமான கலைஞர்களின் பங்கேற்புடன் ‘குருதி கழுவிய குவலயம்’ அரங்கேறத் தயாராகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வைர விழா மலர் வெளியீட்டு நிகழ்வு

*யாழ்ப்பாணம், மார்ச் 23*

யாழ்ப்பாணம் தொழில்நுட்பவில் கல்லூரி வைரவிழாவை முன்னிட்டு வைரவிழா மலர் வெளியீடு எதிர்வரும் 27ஆம் திகதி திங்கட் கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

தொழில்நுட்பவியல் கல்லூரியில் அதன் பணிப்பாளர் சு. பரமேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ். பல் கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறீசற்குணராஜா பிரதம விருந்தினராகவும் யாழ். மாவட்ட அரச அதிபர் அ. சிவபாலசுந்தரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ)

# புத்தக அரங்க விழா நாளை ஆரம்பம்!

*யாழ்ப்பாணம், மார்ச் 23*

தேசிய கலை இலக்கியப் பேரவையின் 50ஆவது ஆண்டையொட்டி “நூறு மலர்கள் மலரட்டும்“ என்ற தொனிப்பொருளில் தொடர்ச்சியாக மாதாந்தம் நடத்தப்பட்டு வரும் புத்தக அரங்க விழாவின் ஒன்பதாவது நிகழ்வு அளவெட்டி அருணோதய கல்லூரியில் நாளை வெள்ளிக்கிழமை தொடக்கம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

அந்தவகையில் நாளை வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு ஆரம்பமாகும் நிகழ்வில், “ஈழத்து நூல்களை அறிவோம்“ என்ற தலைப்பில் நூல்களின் அறிமுகம் மற்றும் கலந்துரையாடலாக கலைஞர் எஸ். ஜெயக்குமார் நினைவு அரங்கில் சிரேஷ்ட சட்டத்தரணியும் கவிஞருமான சோ. தேவராஜா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் நூல் அறிமுக உரைகளை அலெக்ஸ் பரந்தாமனின் “பறையொலி“ சிறுகதைத் தொகுதி பற்றி எழுத்தாளர் வடகோவை வரதராஜன், சி. சிவசேகரத்தின் “ஆச்சியின் கொண்டையூசிகள்“ கவிதைத் தொகுதி தொடர்பாக ஓய்வுபெற்ற கல்வியியல் கல்லூரி விரிவுரையாளர் கலாநிதி ந. இரவீந்திரன், பு. கணேசராசாவின் “பொறுப்பது உன் விதியோ?“ நாடக எழுத்துருக்களின் தொகுப்பு பற்றி ஆசிரியர் க. கஜேந்திரன், அழ. பகீரதன் அவர்களால் தொகுக்கப்பட்ட “மறுமலர்ச்சி“ சிறுகதைத் தொகுப்பு தொடர்பாக ஆய்வாளர் ச. சத்தியதேவன் ஆகியோர் ஆற்றுவர். நிகழ்ச்சித் தொகுப்பை தவகுலராஜன் அபிநயா மேற்கொள்வார். (ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
எடுத்த வேலையை முடிப்பதற்குள் அலைச்சல் அதிகரிக்கும். வியாபாரத்தில் பாக்கிகளை நயமாகப் பேசி வசூலிக்கப்பாருங்கள். சக ஊழியரிடம் கவனமாக பழகுங்கள். விழிப்புடன் செயல்பட வேண்டிய நாள்.

**இடபம்**
சொன்ன சொல்லைக் காப்பாற்றத் துடிப்புடன் செயல்படுவீர்கள். பெற்றோர்கள் பக்கபலமாக இருப்பார்கள். வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். அலுவலகத்தில் மரியாதை கூடும். சிறப்பான நாள்.

**மிதுனம்**
இன்றைய நாள் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் உண்டு. கடன் பிரச்னை கட்டுக்குள் வரும். வியாபாரம் செழிக்கும். உத்தியோகத்தில் முடிவுகள் எடுப்பீர்கள். முயற்சியால் முன்னேறும் நாள்.

**கடகம்**
குடும்பத்தில் அமைதி நிலவும். அரைகுறையாக நின்ற வேலைகள் முடியும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். வியாபாரத்தில் புது தொடர்பு கிடைக்கும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**சிம்மம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் மனதில் இனம்புரியாத பயம் வந்து போகும். குடும்பத்தில் பல வேலைகளையும் நீங்களே பார்க்க வேண்டி வரும். சந்தேகப் புத்தியால் நல்லவர்களை இழக்க வேண்டி வரும்.

**கன்னி**
உங்கள் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். தாய் வழி உறவினர்கள் ஆதரவு பெருகும். வியாபாரத்தில் சில தந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி ஒத்துழைப்பார்.

**துலாம்**
தேவைக்கேற்ப பண வரவு உண்டு. பேச்சைக் குறைத்து செயலில் வேகம் காட்டுவீர்கள். பழைய உறவினர்கள் நண்பர்கள் தேடி வருவார்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும்.

**விருட்சிகம்**
வருமானத்தை உயர்த்த புது முயற்சிகளை மேற்கொள்வீர்கள். குடும்பத்தினருடன் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் நினைத்தது நிறைவேறும் நாள்.

**தனுசு**
எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும்.தாயாருடன் கருத்து மோதல்கள் வரும். பழைய கடனைத் தீர்க்க முயற்சி செய்வீர்கள். உழைப்பால் உயரும் நாள்.

**மகரம்**
குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். விருந்தினர் வருகையால் வீடு களை கட்டும். சொத்து வாங்குவது விற்பது சாதகமாக முடியும். புது யுக்திகளால் பழைய சரக்குகளை விற்பீர்கள்.

**கும்பம்**
கணவன் - மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். செலவுகளை குறைக்க திட்டமிடுவீர்கள். வெளி வட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். தள்ளிப் போன வாய்ப்புகள் வரும். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**மீனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் இன்றைய நாள் ஆரோக்கியத்தில் அதிக அக்கறை காட்டுவது நல்லது. கோபத்தால் இழப்புகள் ஏற்படும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களுடன் சச்சரவு வரும்.

# பொதுச் செயலாளர் பதவிக்கு போட்டியிடுவதற்கு நான் தயார்!

## நீதிமன்றத்தில் பன்னீர்செல்வம் வாதம்

சென்னை, மார்ச் 23

நிபந்தனைகளை நீக்கினால் பொதுச்செயலாளர் தேர்தலில் போட்டியிடத் தயார் என்று உயர் நீதிமன்றத்தில் பன்னீர் செல்வம் தரப்பில் வாதம் முன் வைக்கப்பட்டது.

கடந்த ஆண்டு ஜூலை 11ஆம் திகதி நடந்த அ. தி. மு. க. பொதுக்குழு கூட்டத்தில், ஒருங்கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பாளர் பதவிகள் கலைக்கப்பட்டன. பொதுச் செயலாளர் பதவியை மீண்டும் கொண்டு வருவது எனவும், இடைக்கால பொதுச் செயலாளராக எடப்பாடி பழனிசாமியை நியமித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மேலும், பன்னீர்செல்வம், வைத்தியலிங்கம், ஜே.சிடி.பிரபாகர் உள்ளிட்டோரை கட்சியில் இருந்து நீக்கியும் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை எதிர்த்து பன்னீர்செல்வம் தரப்பு நீதிமன்றில் வழக்கு தொடர்ந்தது.

இந்த வழக்கில், பழனிசாமி தரப்பில் பதில் மனு தாக்கல் செய்யப்பட்டது. அதில், கட்சி விதிகள் திருத்தம், இடைக்கால பொதுச் செயலாளர் தேர்வு குறித்த தீர்மானங்களால் மனுதாரர் எந்த பாதிப்புக்கும் ஆளாகவில்லை என்பதால் எந்த நிவாரணமும் கோர முடியாது. எனவே, வழக்கை அபராதத்துடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என கோரப்பட்டிருந்தது.

இந்நிலையில், பொதுக்குழு தீர்மானங்களை பன்னீர்செல்வம் தரப்பு மீண்டும் ஒரு வழக்கை தாக்கல் செய்தது.

இந்த வழக்குகள், நீதிபதி குமரேஷ் பாபு முன்பு நேற்று விசாரணை நடைபெற்று வந்தது. இந்த விசாரணையில் ஓ. பன்னீர் செல்வம் தரப்பு, ஒருங்கிணைப்பாளர் பதவி 2026ஆம் ஆண்டு வரை நீடிக்கிறது. எந்த வாய்ப்பும் அளிக்காமல், விளக்கம் கேட்காமல், காரணம் கூறாமல் கட்சியில் இருந்து நீக்கியுள்ளனர். இது நியாமற்றது. விதிகளை மீறி யாரும் போட்டியிடாதவாறு இடைக்கால பொதுச் செயலாளர் பதவியை கொண்டு வந்துள்ளனர். ஒருங்கிணைப்பாளர் பதவியை தேர்தல் ஆணையம் அங்கீகரித்துள்ளது.

கட்சியின் அடிப்படை உறுப்பினர்கள்தான் பொதுச் செயலாளர் பதவியை தேர்வு செய்ய முடியும். அந்த விதியை பொதுக் குழு உறுப்பினர்கள் திருத்த முடியாது. தற்போது பொதுக்குழு உறுப்பினர்களாக இருப்பவர்கள், ஒருங்கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பாளரால் தேர்வு செய்யப்பட்டு நியமிக்கப்பட்டவர்கள். ஒருங்கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பாளர் பதவிகள் காலாவதியாகிவிட்டதாக எந்த நீதிமன்றமும் அறிவிக்கவில்லை. தகுதி நீக்கம் செய்துவிட்டு பதவிகள் காலாவதி ஆகிவிட்டதாக கூறுவதை எப்படி சட்டப்படி ஏற்றுக்கொள்ள முடியும்?.

எடப்பாடி பழனிசாமி பொதுச் செயலாளர் ஆவதற்காகவே என்னை கட்சியில் இருந்து நீக்கியுள்ளார். பொதுச்செயலாளர் தேர்தலில் போட்டியிட அனைத்து உறுப்பினர்களுக்கும் உரிமை உள்ளது என எம். ஜி. ஆர். விதிகளை வகுத்த நிலையில், எடப்பாடி பழனிசாமி பொதுச் செயலாளர் இருக்கையில் அமர்வதற்காக தற்போது போட்டியிட கடும் நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன. பொதுச் செயலாளர் தேர்தலில் போட்டியிடுவதற்கான நிபந்தனைகளை நீக்கினால் போட்டியிடத் தயார் வழக்கையும் மீளப்பெறத் தயார் - என்று கூறியது. (ஐ)

# 10 ஆண்டுகள் தமிழகத்தை அ. தி. மு. க. சீரழித்துள்ளது

## காங்கிரஸ் கட்சி குற்றச்சாட்டு

சென்னை, மார்ச் 23

கடந்த 10 ஆண்டுகளாக அ. தி.மு.க. அரசு தமிழகத்தை சீரழித்து வைத்துள்ளது - என்று காங்கிரஸ் கட்சியின் தமிழக தலைவர் கே. எஸ். அழகிரி தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் ஜனநாயகத்தை மத்திய அரசு சிதைத்து வருகிறது என்று ராகுல் காந்தி பேசி உள்ளார். ஜனநாயக முறைப்பாடுகளை அவர் குற்றம் சாட்டவில்லை. சிறந்த இந்திய ஜனநாயகத்தை அவர்கள் பாழ்படுத்துகிறார்கள் என்று தெரிவித்துள்ளார். இதில், எந்த தவறும் இல்லை.

ஜனநாயகத்தை பற்றி பாரதிய ஜனதாவுக்கு ஒன்றும் தெரியாது. அதானி ஊழல் செய்தது குறித்து பேசினால் தேசத்துக்கு எதிராக பேசுவதாக கூறுகின்றனர். பொது மக்கள் இதனை புரிந்து கொள்ள வேண்டும்.

அதானிக்கு சட்டத்துக்கு புறம்பாக பல்வேறு உதவிகள் செய்துள்ளனர். அது தற்போது வெளியே வந்துள்ளது. அதற்காக காங்கிரஸ் பற்றி பொய்யான பரப்புரையை அவர்கள் செய்து வருகின்றனர். இது கண்டிக்கத்தக்கது. இது தொடர்பாக காங்கிரஸ் கட்சியினர் கிராமம் தோறும் சென்று பொதுமக்களிடம் கருத்துக்களை தெரிவிக்க வேண்டும். கடந்த 10 ஆண்டுகளாக அ.தி.மு.க. அரசு தமிழகத்தை சீரழித்து வைத்துள்ளது. தி.மு.க. ஆட்சிக்கு வந்தவுடன் போதை ஒழிப்பு பிரச்னையில் தீவிரமாக இறங்கி பல்வேறு கைது நடவடிக்கைகளை செய்துள்ளது.

மேலும் தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சரியில்லை என கூறுகின்றனர். நடவடிக்கை ஏதும் எடுக்காத பட்சத்தில் அதுபோல கூறலாம். ஆனால், இங்கு தப்பு செய்பவர்கள் உடனடியாக தண்டனை பெறுகின்றனர் - என்றார்.

# கருணாநிதி நூற்றாண்டுவிழா திருவாரூரில் ஜூன் 3 ஆரம்பம்!

சென்னை, மார்ச் 23

தி. மு. க. முன்னாள் தலைவரும் தமிழக முன்னாள் முதல்வருமான கருணாநிதி நூற்றாண்டு தொடக்க விழா மாநாடு திருவாரூரில் ஜூன் 3 ஆம் திகதி நடைபெறும் என்று மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

முதல்வர் மு. க. ஸ்டாலின் தலைமையில் தி. மு. க. மாவட்டச் செயலாளர்கள் கூட்டம், அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் விவரம்:

தலைவர் கருணாநிதிக்கு வரும் ஜூன் 3ஆம் திகதி நூற்றாண்டு விழா தொடங்குகிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசியல் கொள்கைத் திட்டங்கள் இன்று இந்தியாவையே ஈர்த்துள்ளது. திராவிட மொடல் ஆட்சியின் நலத்திட்டங்கள் இந்தியாவின் அனைத்து மாநிலங்களின் கவனத்தையும் தமிழகத்தை நோக்கி திரும்பிப் பார்க்க வைத்துள்ளது. கழகமும், கழக ஆட்சியும் ஒரே நேரத்தில் பேரும் புகழும் அடைந்திருக்கும் இந்த ஆண்டில் நம்மை எல்லாம் ஆளாக்கிய தலைவர் கருணாநிதியின் நூற்றாண்டு விழா வருவது மிகமிகப் பொருத்தமானது. இது கிடைத்தற்கரிய நல்வாய்ப்பு ஆகும். தலைவர் கருணாநிதி, அரை நூற்றாண்டு காலம் கட்டிக் காத்த நம் கழகத்தை மேலும் வலிமை படுத்த, ஒரு கோடி உறுப்பினர் சேர்க்க “உடன்பிறப்புகளாய் இணைவோம்” என்ற மாபெரும் முன்னெடுப்பு கழக தலைவர் மு.க.ஸ்டாலினால் தொடங்கப்படவுள்ளது - என்றும் தெரிவிக்கப்பட்டது.

# சர்வதேச நாணய நிதிய நிதி உதவி கடன் வாங்கும் செலவை குறைக்கும்

## மத்திய வங்கி ஆளுநர் கூறுகிறார்



கொழும்பு, மார்ச் 23

**சர்வதேச நாணய நிதியத்தின் நிதியுதவி திவாலாகிவிட்ட நாட்டுக்கு கடன் வாங்கும் செலவைக் குறைக்க உதவும் என மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்தார்.**

அரசாங்க செலவினங்களை ஈடுசெய்ய இந்த நிதியுதவியை பயன்படுத்த இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியம் அனுமதி வழங்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் ப்ளூம்பேர்க்கிற்கு வழங்கிய நேர்காணலிலேயே ஆளுநர் நந்தலால் வீரசிங்க இவ்வாறு கூறினார்.

இந்த நிதியுதவி உள்நாட்டுச் சந்தைகளில் இருந்து அரசாங்கம் கடன் வாங்கும் தேவையை எளிதாக்கும் என்றும் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்தார்.

இது வட்டி விகிதங்களைக் குறைக்கவும், உள்நாட்டு வட்டி விகிதங்கள் மீதான அழுத்தத்தை மேலும் குறைக்கவும் உதவும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதில் முதல் தவணையாக கிடைக்கும் 333 மில்லியன் டொலர் நிதி, ஸ்திரத்தன்மையை மீட்டெடுக்கவும் அந்நிய செலாவணி இருப்புக்களை மீண்டும் உருவாக்கவும் உதவும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(அ)



# எகிப்து தூதுவரை சந்தித்தார் டக்ளஸ்

கொழும்பு, மார்ச் 23

இலங்கையின் கடற்றொழில் சார்ந்த அபிவிருத்தியில் எகிப்தின் அனுபவங்களையும் ஒத்துழைப்புக்களையும் பயன்படுத்திக் கொள்வது தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது.

இலங்கைக்கான எகிப்து தூதுவர் மாகட் மொஷ்லேக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் இடையில் நேற்று முன் தினம் செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற சந்திப்பின்போதே மேற்குறிப்பிடப்பட்ட விடயங்கள் பிரஸ்தாபிக் கப்பட்டன.

இதன்போது, கடற்றொழிலாளர்களுக் கும் கடலுணவு உற்பத்தியாளர்களுக்கும் உதவுவதற்கு தாம் விருப்பமாக இருப்பதாகத் தெரிவித்த எகிப்து தூதுவர், தமது நாட்டின் முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ளத் தயாராக இருப்பதாகவும், விரைவில் வட மாகாணத்துக்கு தான் வருகை தர எதிர்ப்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

எகிப்து தூதுவரின் வடக்குக்கான விஜயத்தை ஆர்வமுடன் எதிர்பார்த்திருப்பதாக தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கடற்றொழில் மற்றும் நீர்வேளாண்மை சார்ந்து மேற்கொள்ளப்படும் திட்டங்களை எடுத்துரைத்ததுடன், வெளிநாடுகளின் அல்லது முதலீட்டாளர்களின் நிதியுதவி கிடைக்குமானால் ஆரம்பிப்பதற்கு எதிர்பார்த்துள்ள பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகவும் தெளிவுபடுத்தினார்.

(அ)

# கிளிநொச்சி செயலகத்தின் ஏற்பாட்டில் தொழில்சந்தை



கிளிநொச்சி, மார்ச் 23

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள இளைஞர் யுவதிகளுக்கான தொழிற் பயிற்சி, உயர்கல்வி மற்றும் தொழில் வாய்ப்புக்களை பெற்றுக்கொள்வதற்கான மாவட்ட தொழிற்சந்தை நேற்று இடம்பெற்றது.

கல்வி அமைச்சின் திறன்கள் அபிவிருத்திப் பிரிவு மற்றும் மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களம் என்பவற்றுடன் இணைந்து கிளிநொச்சி மாவட்ட செயலகத்தினால் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிகழ்வு நேற்று காலை 9 மணியளவில் பழைய மாவட்ட செயலக வளாகத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.சிறிமோகன் பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன், திணைக்கள அதிகாரிகள், தொழில் வழங்கும் நிறுவனங்கள், அரச மற்றும் அரச சார்பற்ற தொழில் பயிற்சி நிறுவனங்களின் தலைவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது, தொழில் தேடும் இளைஞர் யுவதிகளுக்கான ஆலோசனை வழிகாட்டல்களும், விற்பனைச் சந்தையும் , கண்காட்சியும் இடம்பெற்றன. (அ)



# புத்தரிசி வழங்கல் நிகழ்வு

முல்லைத்தீவு, மார்ச் 23

:மாரி மழை பொழியட்டும் வயல் நிலங்கள் செழிக்கட்டும்" என்னும் வாசகத்திற்கு இணங்க தேசிய புத்தரிசி விழா 2023 நடைபெறவுள்ளது.

இந்த விழாவினை முன்னிட்டு புத்தரிசி வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்டம் ஒலுமடு பகுதியில் அமைந்துள்ள கமநல அபிவிருத்தித் திணைக்கள அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்ததுடன் புத்தரிசியையும் வழங்கி ஆரம்பித்தார்.

இந்த நிகழ்வில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர், கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் உதவி ஆணையாளர், பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர், விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், விவசாயிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (அ)

# இருபது இலட்சம் குழந்தைகளுக்கு மதிய உணவு வழங்குவது இலக்கு

கொழும்பு, மார்ச் 23

இவ்வருடம் 20 இலட்சம் சிறார்களுக்கு மதிய உணவு வழங்குவதே அரசாங்கத்தின் இலக்கு என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

எம்பிலிப்பிட்டியவிலுள்ள பாடசாலையொன்றுக்கு கண்காணிப்பு விஜயத்தை மேற்கொண்ட பின்னர் ஊடகங்களுக்கும் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அமெரிக்க அரசாங்கத்தின் அனுசரணையுடன் குறித்த மதிய உணவுத் திட்டம் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# யாழ்.பல்கலை மாணவர்களுக்கு இந்திய அரசு விசேட நிதி உதவி

யாழ்ப்பாணம், மார்ச் 23

பொருளாதார நிலையில் பின்தங்கியுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர்கள் 100 பேருக்கு, இந்திய அரசாங்கத்தினால் வாழ்வாதாரச் செயற்பாடுகளுக்காக ஒவ்வொருவருக்கும் தலா ஐயாயிரம் ரூபா விசேட நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

இந்த மாத இறுதியில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவுள்ள இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே இந்தத் திட்டத்தை ஆரம்பித்து வைப்பார் என்று தெரியவருகின்றது.

இந்திய அரசாங்கத்தின் இந்தத் தீர்மானம் குறித்து இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே யாழ். பல்கலைக் கழகத்துக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளதாகவும், அந்தக் கடிதத்தில் “கடந்த மாதம் 11 ஆம் திகதி, யாழ்ப்பாணம் மத்திய கலாசார மத்திய நிலையத்தை யாழ்ப்பாண மக்களுக்கு உவந்தளிக்கும் நிகழ்வுக்கு இந்தியப் பிரதமரின் விசேட பிரதிநிதியாக வந்திருந்த இராஜாங்க கலாநிதி எல். முருகன் அறிவித்த படி, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் கல்வி கற்கும் மாணவர்களில் பொருளாதார நிலையில் பின்தங்கியுள்ள குடும்பங்களைச் சேர்ந்த 100 பேருக்கு விசேட நிதியு தவியை வழங்கு வதற்கு இந்திய அரசாங்கம் முடிவு செய்துள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், இந்தத் திட்டத்தின் கீழ் யாழ்.பல்கலைக் கழகத்தினால் தெரிவு செய்யப்பட்டு முன்மொழியப் படும் ஒவ்வொரு மாணவனுக்கும் நடப்புக் கல்வி ஆண்டில் இருந்து, அடுத்து வரும் ஒரு வருட காலத்துக்கு இந்த நிதியுதவி வழங்கப்படும். யாழ்.பல்கலைக் கழகத்தின் சகல பீடங்களில் இருந்தும் இளநிலைப் பட்டதாரி மற்றும் பட்டப்பின் மாணவர்கள் இத் திட்டத்தின் கீழ் பயனாளிகளாகத் தெரிவு செய்யப்படலாம்.

நான்கு இளநிலை மாணவர்களுக்கு ஒரு பட்டப்பின் படிப்பு மாணவர் என்ற அடிப்படையில் தெரிவு இடம்பெறும். இதற்கென இந்தியத் தூதரகத்தினால் வழங்கப்பட்ட வழிகாட்டுதல்க ளுக்கமைய பொரு ளாதார நிலையில் அதிகமாகப் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத் திட்டம் பற்றிய இந்தியத் தூதுவரின் கடிதம் கிடைத்துள்ளதாகவும், இது தொடர்பான மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மாணவர் நலச்சேவைகள் பணிப்பாளர் பேராசிரியர் கே. சசிகேஷ் இணைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார் என்றும் யாழ்.பல்கலைக்கழக வட்டாரங்கள் உறுதி செய்துள்ளன. (அ)

# யாழ்.போதனா வைத்தியசாலையில் இரு நோயாளிகள் இடையே மோதல்!

யாழ்ப்பாணம், மார்ச் 23

யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த இரு நோயாளிகள் மோதிக்கொண்டமையை அடுத்து இருவரும் பொலிஸ் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

காயங்களுடன் யாழ்.போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு இருந்த இருவர் நேற்று புதன்கிழமை வைத்திய சாலை நோயாளர் விடுதிக்குள் தமக்குள் மோதிக்கொண்டனர்.

அதனை அடுத்து இருவருக்கும் இடையிலான மோதலை வைத்திய சாலை பாதுகாப்புப் பிரிவினர் தடுத்து நிறுத்தியதுடன் , வைத்தியசாலை பொலிஸாருக்கும் தகவல் தெரிவித்தனர். அதனை அடுத்து பொலிஸார் இருவரிடமும் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)



# மகிந்த, பஸில் மீதான பயணத் தடை நீக்கம்

கொழும்பு, மார்ச் 23

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷவுக்கு எதிராக விதிக்கப்பட்ட பயணத்தடை இனிமேல் தொடராது என குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்துக்கு உயர் நீதிமன்றம் நேற்று அறிவித்துள்ளது.

பொருளாதார நெருக்கடிக்கு முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் முன்னாள் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆகியோரே காரணம் என தெரிவித்து மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையிலான ஐவரடங்கிய உயர் நீதிமன்ற அமர்வு இந்த மனுக்களை விசாரணைக்கு எடுத்துக்கொண்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

ஒக்ரோபர் 7ஆம் திகதிக்கு பின்னர் உயர் நீதிமன்றம் பயணத் தடை உத்தரவை நீடிக்கவில்லை என சுட்டிக் காட்டிய சட்டத்தரணிகள், இதனை குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளருக்கு அறிவிக்கக் கோரினர்.

இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட நீதிமன்றம், இரண்டு பிரதிவாதிகளுக்கு வழங்கப்பட்ட பயணத் தடை இனிமேல் நடைமுறையில் இருக்காது என அறிவித்தது. (அ)

# இலங்கை மீனவர்களின் பாதிப்புக்களை தமிழகம் புரிந்துகொள்ளாதது வேதனை

## பிரதித் தூதுவரிடம் அமைச்சர் டக்ளஸ்



கொழும்பு, மார்ச் 23

**இந்தியக் கடற்றொழிலாளர்களின், அத்து மீறி எல்லை தாண்டிய சட்டவிரோத தொழில் முறையினால் இலங்கையின் வடபகுதியில் வாழ்ந்துகொண்டிருக்கும் தமிழ் பேசும் மக்களே பாதிக்கப்படுகின்றார்கள் என்பதை தமிழக மக்கள் புரிந்து கொள்ளாமல் இருப்பது வருத்தமளிப்பதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.**

இலங்கைக்கான இந்தியப் பிரதித் தூதுவர் வினோத் ஜேக்கப்புடனான சந்திப்பு தொடர்பாக கருத்து தெரிவிக்கும்போதே கடற்றொழில் அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

மாளிகாவத்தையில் அமைந்துள்ள கடற்றொழில் அமைச்சில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற குறித்த சந்திப்பு தொடர்பாக மேலும் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா-

இலங்கையின் கடல் வளத்தினையும், வட பகுதி தமிழ் பேசும் கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தையும் பாதுகாக்கும் நோக்குடன் இலங்கைக் கடற்படையினர் மேற்கொள்ளும் சட்ட ரீதியான நடவடிக்கைகள் தொடர்பாக இந்தியாவில் வெளிப்படுத்தப்படும் தவறான கருத்துக்கள் இரண்டு நாடுகளுக்கும் இராஜ தந்திர நெருக்கடிகளை ஏற்படுத்தக் கூடியவை.

இந்நிலையில், இந்தியக் கடற்றொழிலாளர்களின் அத்துமீறிய எல்லை தாண்டிய சட்ட விரோத தொழிலை கட்டுப்படுத்துவது தொடர்பாக முன்னெடுக்கப்படும் இராஜதந்திர அணுகுமுறைகளின் தொடர்ச்சியாக நேற்று பிரதி தூதுவருடனான சந்திப்பு இடம்பெற்றது. இதன்போது இந்தியக் கடற்றொழிலாளர் விவகாரத்தில் இரண்டு நாடுகளும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது - என்றார். (அ)

# நல்லிணக்கம் பற்றிய துறைசார் குழு தலைவராக டிலான் பெரேரா நியமனம்

கொழும்பு, மார்ச் 23

நல்லிணக்கம் மற்றும் தேசிய ஒற்றுமை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவராக பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவரது பெயரை பாராளுமன்ற உறுப்பினர் மாயாதுன்ன சிந்தக அமல் முன்மொழிந்ததுடன், கெவிந்து குமாரதுங்க அதனை வழிமொழிந்தார்.

ஆளும் கட்சி உறுப்பினரால் தனது பெயர் முன்மொழியப்பட்டு, எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவரினால் வழிமொழியப்பட்டு குழுவின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டமையையிட்டு தான் மகிழ்ச்சியடைவதாக டிலான் பெரேரா இங்கு குறிப்பிட்டார்.

நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு, தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்க அலுவலகம், காணாமல்போன ஆட்கள் பற்றிய அலுவலகம், இழப்பீடுகள் பற்றிய அலுவலகம், சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட சீர்திருத்தத் திணைக்களம், அரசாங்க மொழிகள் ஆணைக்குழு போன்ற நிறுவனங்களைக் குழு முன்னிலையில் கலந்துரையாடல்களுக்கு அழைக்கப்படவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

# மனித உரிமை ஆணைக்குழு இன்று மீண்டும் கூடுகின்றது

## மருந்து தட்டுப்பாடு குறித்து ஆராய்வதற்காக

கொழும்பு, மார்ச் 23

வைத்திய மற்றும் சிவில் உரிமைகள் தொடர்பான வைத்தியர்களின் தொழிற்சங்க சம்மேளனம் மற்றும் இலங்கை மருத்துவ சங்கம் சமர்ப்பித்த முறைப்பாட்டின் அடிப்படையில் மருந்து தட்டுப்பாடு குறித்து ஆராய மனித உரிமைகள் ஆணைக்குழு இன்று மீண்டும் கூடவுள்ளது.

இதற்கு முன்னர் இரண்டு தடவைகள் இந்த விசாரணை நடத்தப்பட்டபோதிலும் சுகாதார அமைச்சின் செயலாளர் மற்றும் சுகாதாரப் பணிப்பாளர் நாயகம் இந்த விசாரணையில் கலந்து கொள்ளவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணை இன்று காலை 10 மணிக்கு மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இடம்பெறவுள்ளதாக வைத்திய மற்றும் சிவில் உரிமைகள் தொடர்பான வைத்தியர்களின் தொழிற்சங்க சம்மேளனம் தெரிவித்துள்ளது. (அ)

# மேல் மாடியிலிருந்து வீசப்பட்ட மூன்று மாத கருவின் சடலம்!

யாழ்ப்பாணம், மார்ச் 23

யாழ்.போதனா மருத்துவமனையின் 22ஆம் இலக்க மேல் மாடி விடுதியில் இருந்து கீழே வீசப்பட்ட 3 மாதம் நிரம்பிய கருவின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

நீர்க்குழாய் ஒன்று உடைந்த நிலையில், அதன் ஊடாக சிசுவின் சடலம் கீழே விழுந்துள்ளது.

சட்டவிரோதமாக கருத்தரித்த யாரே ஒருவர் இந்த கருவை பிரசவித்திருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# லிஸ்டீரியா குறித்து அச்சப்படவேண்டாம்

கொழும்பு, மார்ச் 23

நாட்டில் லிஸ்டீரியா (Listeria – Listeriosis) தொற்று நோய் பரவும் அபாயம் இல்லை என தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் தேவையற்ற அச்சத்தை ஏற்படுத்த வேண்டாம் என சுகாதார அமைச்சு பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

சிவனொளிபாத மலைக்கு யாத்திரைக்கு சென்ற பெண் ஒருவரே நோய்த்தொற்றுக்கு உள்ளாகி உயிரி ழந்ததாக வெளியான செய்தி தொடர்பான அறிவிப்பை வெளியிடும் போதே அமைச்சு இதனைத் தெரிவித்துள்ளது.

உயிரிழந்தவரின் இறப்புக்கான காரணம் லிஸ்டீரியா நோய் என உறுதி செய்யப்படவில்லை என கூறப்படுகிறது.

இதேவேளை, காய்ச்சல், வாந்தி, தலைவலி, வயிற்றுப்போக்கு போன்ற அறிகுறிகளை வெளிப்படுத்தும் லிஸ்டீரியா பக்டீரியா, அசுத்தமான உணவின் மூலம் உடலுக்குள் பரவுவதாக மருத்துவர்கள் கூறுகின்றனர்.

# பாடசாலைச் சீருடைகள் இன்று முதல் விநியோகம்

கொழும்பு, மார்ச் 23

இரண்டாம் கட்ட பாடசாலைச் சீருடைகள் இன்று விநியோகிக்கப்படவுள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அதனடிப்படையில், ஏப்ரல் விடுமுறைக்கு முன்னர் 4.1 மில்லியன் பாடசாலை மாணவர்கள் மற்றும் பிக்கு மாணவர்களுக்கு சீருடைகள் விநியோகிக்கப்படவுள்ளன.

முதல் கட்டத்தில் சீன அரசாங்கத்தால் வழங்கப்பட்ட சீருடைகள் 70 வீதமான மாணவர்களுக்கு விநியோகிக்கப்பட்டிருந்தன.

இதேவேளை, பாடசாலை பாடப்புத்தக விநியோகம் இன்று முதல் ஆரம்பமாகவுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

# குவைத்துக்கு தொழிலுக்காக சென்ற 48 இலங்கையர்கள் நாடு திரும்பினர்

கொழும்பு, மார்ச் 23

தொழிலுக்காக குவைத்துக்கு சென்று பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கிய 48 இலங்கையர்கள் நேற்றைய தினம் நாடு திரும்பியுள்ளனர்.

சிறிலங்கன் விமான சேவைக்கு சொந்தமான யு.எல் 230 என்ற விமானத்தில் நேற்று அதிகாலை நாடு திரும்பியுள்ளனர்.

குவைத்துக்கு தொழிலுக்காக சென்று பல்வேறு சிரமங்களை எதிர்கொண்ட இலங்கையர்கள் குவைத்துக்கான இலங்கை தூதரகத்துக்கு அறிவித்துள்ளனர்.

இந்நிலையில் இலங்கைக்கான தூதரகத்தின் நடவடிக்கையால் 48 இலங்கையர்களும் நேற்று நாடு திரும்பியுள்ளனர். 38 பெண்களும் 10 ஆண்களுமே இவ்வாறு நாடு திரும்பியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (அ)

# நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் ஊழியர்கள் இன்று பணிப்புறக்கணிப்பு

கொழும்பு, மார்ச் 23

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை ஊழியர்களால் இன்று வியாழக்கிழமை பணிப் பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்படவுள்ளது.

கோரிக்கைகளுக்கு தீர்வு வழங்கப்படாமையினால் இந்த பணிப்பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 13ஆம் திகதி முதல் முன்னெடுக்கப்பட்டுள்ள மெதுவாக பணிபுரியும் தொழிற்சங்க நடவடிக்கை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதாக நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் தொழிற்சங்கத் தலைவர் உபாலி ரத்நாயக்க தெரிவித்தார். (அ)

# நாணய நிதியத் திட்டத்தை செயல்படுத்த முழு ஆதரவு!



## குமார் வெல்கம சபையில் அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 23

சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவை ஜனாதிபதி பெற்றுள்ளார். எனவே, தற்போது நாம் அனைவரும் நாட்டுக்காக ஆதரவளிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிதி உதவியை பெற்றுக் கொள்வதற்காக ஜனாதிபதி மேற்கொண்டுள்ள உடன்படிக்கை தொடர்பில் நேற்று பாராளுமன்றத்தில் ஜனாதிபதி உரையாற்றினார். அதனைத் தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சர்வதேச நாணய நிதியத்தின் நிதி உதவியை பெற்றுக் கொள்வதற்காக எதிர்க்கட்சி என்ற வகையில் நாம் ஆதரவு வழங்க வேண்டும். இந்த உதவி கிடைப்பதையிட்டு மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்த சந்தர்ப்பத்தில் நாம் அரசாங்கத்துக்கு ஆதரவளிக்க வேண்டும்.

நாணய நிதியத்தின் ஆதரவைப் பெற முடியாது என்று பலராலும் வாதங்கள் முன்வைக்கப்பட்டன. இருப்பினும், எப்படியாவது ஜனாதிபதி இந்த ஆதரவை பெற்றுள்ளார். எனவே எம்மால் முடிந்தளவு ஆதரவை வழங்கி, இந்த நாட்டை கட்டியெழுப்புவோம் - என்றார். (அ)

# மக்கள் மீது புதிய வரிகள்!

கொழும்பு, மார்ச் 23

சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபையின் அனுமதியுடன் இலங்கைக்கு கடன் வசதியை வழங்குவதற்கு பல வகையான வரிகள் முன்மொழியப்பட்டுள்ளதாக பொருளாதார ஆய்வாளர் தனநாத் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

ஊடகங்களிடம் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு கடன் வழங்கும் யோசனைக்கு சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுக்குழு அனுமதி வழங்கியிருந்ததை அடுத்தே பொருளாதார ஆய்வாளர் இதனை கூறியுள்ளார்.

இதேவேளை சர்வதேச நாணய நிதியத்தால் அங்கீகரிக்கப்பட்ட விரிவான கடன் வசதியை இலங்கை பெற்றதால் மக்களின் வாழ்க்கைச் செலவு குறையாது என இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் உப தலைவர் துமிந்த ஹூலங்கமுவ தெரிவித்தார்.

இதன்படி இலங்கைக்கு சுமார் 2.9 பில்லியன் டொலர் கடன் உதவியை சர்வதேச நாணய நிதியம் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும். (அ)

# இந்திய நிதி அமைச்சரை சந்தித்தார் மொறகொட

கொழும்பு, மார்ச் 23

இந்தியாவுக்கான இலங்கை தூதுவர் மிலிந்த மொறகொட, இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனை நேற்று முன்தினம் சந்தித்துள்ளார்.

இந்தியப் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் இலங்கைக்கான உதவிகள் தொடர்பாக 2021 நவம்பர் முதல் அமைச்சர் சீதாராமனுடன் தூதுவர் மிலிந்த மொறகொட நடத்தி வரும் தொடர்ச்சியான சந்திப்புகளின் அடிப்படையில் இந்த சந்திப்பு நிகழ்ந்துள்ளது.

இலங்கைக்கான சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதி ஏற்பாட்டை நனவாக்குவதற்கு இந்திய அரசாங்கம் வகித்த தலைமைத்துவத்திற்காக இந்திய நிதியமைச்சர் சீதாராமனுக்கு இலங்கை தூதுவர் நன்றி தெரிவித்தார்.

இந்த நிலையில் அமைச்சர் சீதாராமன் மற்றும் தூதுவர் மொறகொட ஆகியோர், இருதரப்பு பொருளாதார ஒத்துழைப்பில் முன்னோக்கி செல்லும் வழி குறித்தும் விவாதித்தனர்.

இந்திய முதலீடுகளை இலங்கைக்கு ஈர்ப்பது, இருதரப்பு வர்த்தகத்தை மேம்படுத்துவது, குறிப்பாக இந்திய ரூபாய் வர்த்தக விரிவாக்கம் மற்றும் இலங்கைக்கு இந்திய சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிப்பதற்கான வழிமுறைகளும் இதன்போது ஆராயப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# இலங்கையின் கடன் சீரமைப்பில் பங்கேற்குமாறு பல தரப்பு கடன் வழங்குநர்களுக்கு சீனா அழைப்பு

பீஜிங், மார்ச் 23

நியாயமான சுமை - பகிர்வு கொள்கையின் கீழ் இலங்கையின் கடன் மறுசீரமைப்பில் பங்கேற்குமாறு வர்த்தக மற்றும் பலதரப்பு கடன் வழங்குநர்களுக்கு சீனா அழைப்பு விடுத்துள்ளது.

சர்வதேச நாணய நிதியம், இலங்கைக்கான 2.9 பில்லியன் டொலர் பிணையெடுப்புக்கு அனுமதி வழங்கியுள்ள நிலையில், நேற்று முன் தினம் இடம்பெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில், சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் வாங் வென்பின் இதனைத் தெரிவித்தார்.

சீனாவின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வங்கி, கடன் பிரச்சினைகளை விரைவாகவும் திறம்படமாகவும் நிவர்த்தி செய்வதற்கு இலங்கைக்கு நிதியுதவி ஆதரவு ஆவணங்களை வழங்கியுள்ளது.

தொடர்புடைய நாடுகள் மற்றும் சர்வதேச நிதி நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்ற சீனா தயாராக உள்ளது.

இலங்கையின் நிலைமையை வழிநடத்துவதற்கும், அதன் கடன் சுமையைத் தளர்த்துவதற்கும், நிலையான அபிவிருத்தியை அடைய உதவுவதற்கும் தொடர்ந்து சாதகமான பங்கை வகிக்க சீனா தயாராக உள்ளதாக சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் தெரிவித்தார். (அ)

# கைகளைத் துண்டித்துச் சென்ற சந்தேகநபரை தேடி விசாரணை!

கொழும்பு, மார்ச் 23

மொரட்டுவை - கொரலவெல்ல பிரதேசத்தில் கூரிய ஆயுதத்தால் நபர் ஒருவரின் கைகளைத் துண்டித்து எடுத்துச்சென்ற சந்தேகநபரை கைது செய்ய விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன் தினம் இரவு 40 வயதுடைய குறித்த நபர் தனது வீட்டின் முன் நின்று கொண்டிருந்த போது, சந்தேக நபர் கூரிய ஆயுதத்தால் அவரது கைகளைத் துண்டித்துள்ளார்.

தனிப்பட்ட முன்விரோதம் காரணமாக, குறித்த நபரின் கைகள் முழங்கையுடன் துண்டித்து எடுத்துச்சென்றுள்ளதாக பொலிஸார் கூறினர்.

மொரட்டுவை - கொரலவெல்ல பிரதேசத்தில் வசிக்கும் இந்த நபர் தொழில் ரீதியாக ஒரு மின்னியலாளர் ஆவார்.

சம்பவ இடத்திற்கு விரைந்த பிரதேசவாசிகள் பாதிக்கப்பட்ட நபரை மீட்டு பாணந்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

சந்தேக நபர் எடுத்துச் செல்லாமல் இருந்திருந்தால் இரண்டு கைகளையும் ஒட்டவைத்திருக்கலாம் என வைத்தியசாலையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இந்த காட்சி அருகிலுள்ள சி.சி.ரீ.வி கமராவொன்றில் பதிவாகியுள்ள நிலையில் அதனூடாக சந்தேகநபர் அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# இலங்கையில் முதலீடு செய்வதற்கு ஜப்பான் முதலீட்டாளர்கள் ஆர்வம்

கொழும்பு, மார்ச் 23

இலங்கையில் புதிய முதலீட்டு வாய்ப்புகள் குறித்து கலந்துரையாடுவதற்காக ஜப்பானிய முதலீட்டாளர்கள் குழு, ஜப்பான் பிரதித் தூதுவர் கட்சுகி கோட்டாரோவுடன் இணைந்து இலங்கை முதலீட்டுச் சபையுடன் சந்திப்பொன்றை நடத்தியுள்ளது.

இதன்போது, முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம, முதலீட்டு சபையின் பணிப்பாளர் நாயகம் ரேணுகா எம். வீரக்கோன் மற்றும் ஏனைய அதிகாரிகளுடன் இலங்கையில் உள்ள முக்கிய முதலீட்டு வாய்ப்புகள் குறித்து ஆக்கபூர்வமான கலந்துரையாடலை முதலீட்டாளர்கள் மேற்கொண்டனர்.

இதன்போது, மருத்துவ உபகரண உற்பத்தி, மருந்துவம், பயணம் மற்றும் சுற்றுலாத் தொழில் குறிப்பாக கலாசார சுற்றுலா, ஹோட்டல் தொழில், சொத்து மேம்பாடு மற்றும் காணி விற்பனை போன்ற பல தரப்பட்ட துறைகளில் முதலீடு செய்வதற்கான ஆர்வத்தை ஜப்பானிய முதலீட்டாளர்கள் வெளிப்படுத்தினர்.

இந்த சந்திப்பில் உரையாற்றிய இராஜாங்க அமைச்சர், "பொருளாதார நெருக்கடிக்குப் பின்னர் சீர்திருத்தங்கள் மற்றும் முன்னேற்றங்களைச் செய்வதில் இலங்கை நீண்ட தூரம் வந்துள்ளது. அங்கீகரிக்கப்பட்ட சர்வ தேச நாணய நிதியத்தின் திட்டம் முதலீட்டாளர்களின் நம்பிக்கையை மேம்படுத்தவும், வணிகம் செய்வதற்கு உகந்த சூழலை உருவாக்கவும், அதன் மூலம் நாட்டிற்கு மிகவும் தேவையான நேரடி வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்கவும் உதவும் - என்றார்.

மேலும், முதலீட்டாளர்களை மேலும் எளிதாக்குவதற்கு முதலீட்டு சபைக்கு அதிகாரம் அளிக்கப்படும் வணிகத்தை எளிதாக்கும் விசேட முதலீட்டுக் கொள்கை குறித்தும் பிரதிநிதிகளுக்கு இராஜாங்க அமைச்சர் விளக்கினார். மேலும், எதிர்காலத்தில் முதலீட்டாளர்களுக்கு வரிச் சலுகைகள் வழங்குவது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது என்றும் அவர் கூறினார்.

வட மாகாணம், திருகோணமலை மாவட்டம் மற்றும் ஏனைய தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களில் ஸ்தாபிக்கப்படவுள்ள ஐந்து புதிய கைத்தொழில் மற்றும் தனியாரால் நிர்வகிக்கப்படும் வலயங்களில் முதலீடு செய்யுமாறு முதலீட்டாளர்களுக்கு அவர் அழைப்பு விடுத்தார். (அ)

# இலங்கையின் கடன் சீரமைப்பில் பங்கேற்குமாறு பல தரப்பு கடன் வழங்குநர்களுக்கு சீனா அழைப்பு

பீஜிங், மார்ச் 23

நியாயமான சுமை-பகிர்வு கொள்கையின் கீழ் இலங்கையின் கடன் மறுசீரமைப்பில் பங்கேற்குமாறு வர்த்தக மற்றும் பலதரப்பு கடன் வழங்குநர்களுக்கு சீனா அழைப்பு விடுத்துள்ளது.

சர்வதேச நாணய நிதியம், இலங்கைக்கான 2.9 பில்லியன் டொலர் பிணையெடுப்புக்கு அனுமதி வழங்கியுள்ள நிலையில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில், சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் வாங் வென்பின் இதனைத் தெரிவித்தார்.

சீனாவின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வங்கி, கடன் பிரச்சினைகளை விரைவாகவும் திறம்படமாகவும் நிவர்த்தி செய்வதற்கு இலங்கைக்கு நிதியுதவி ஆதரவு ஆவணங்களை வழங்கியுள்ளது.

தொடர்புடைய நாடுகள் மற்றும் சர்வதேச நிதி நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்ற சீனா தயாராக உள்ளது.

இலங்கையின் நிலைமையை வழிநடத்துவதற்கும், அதன் கடன் சுமையைத் தளர்த்துவதற்கும், நிலையான அபிவிருத்தியை அடைய உதவுவதற்கும் தொடர்ந்து சாதகமான பங்கை வகிக்க சீனா தயாராக உள்ளதாக சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் தெரிவித்தார். (அ)

# கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தின் பணம் குருக்கள் வீட்டிலிருந்து திருட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 23

கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயப் பணம் சுமார் 30 இலட்ச ரூபாய் ஆலயக் குருக்கள் வீட்டில் இருந்து திருடப்பட்டுள்ளது.

ஆலயப் பணத்தைக் குருக்கள் வீட்டில் பாதுகாப்பாக வைத்திருந்தவேளை, அவர் மருத்துவ சிகிச்சைக்காக அண்மையில் கொழும்பு சென்றுள்ளார்.

அந்நேரத்தில் வீட்டின் கூரையை பிரித்து உள் இறங்கிய கும்பல் ஒன்று குருக்கள் வீட்டில் இருந்த பணத்தைத் திருடிச் சென்றுள்ளதாக எனக் கூறப்படுகின்றது.

குருக்கள் கொழும்பில் இருந்து நேற்று முன்தினம் வீடு திரும்பியபோதே வீட்டின் கூரை பிரித்து ஆலயப் பணம் திருடப்பட்ட விடயத்தை அறிந்துள்ளார்.

அது தொடர்பில் காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (அ)

வினோத் கரே

# ஏஜென்சி மோசடி:

## கனடாவாழ் இந்தியர்கள் பலரது எதிர்காலம் கேள்விக்குரியதாகிறதா?




கனடாவில் உள்ள இந்திய மாணவர்களில் பலர், போலியான கல்லூரி சேர்க்கை ஆவணங்களின் அடிப்படையில் நாட்டிற்குள் நுழைந்ததற்காக அரசாங்கத்தால் வெளியேற்றப்படுவார்கள் என்ற அச்சத்தில் வாழ்கின்றனர்.

### என்ன பிரச்னை?

வெட்கத்தால், பல மாணவர்கள் வெளிப்படையாக வெளியே வருவதில்லை. ஆனால் இந்த வழக்கு தொடர்பான வழக்கறிஞர் ஒருவர், அத்தகைய மாணவர்களின் எண்ணிக்கை 150 முதல் 200 வரை இருக்கலாம் என்று கூறுகிறார்.

மாணவர்கள் தாங்கள் நிரபராதி என்றும், ஜலந்தரில் உள்ள குடியேற்ற ஆலோசனை நிறுவனத்தால் ஏமாற்றப்பட்டதா





கவும் அவர்களே இந்த ஆவணங்களை வழங்கியதாகவும் கூறுகின்றனர். இருப்பினும் மற்ற ஏஜென்சிகளுக்கும் இதில் தொடர்புள்ளதா என்பது தெளிவாகத் தெரியவில்லை.

முன்னதாக, அமெரிக்காவில் உள்ள போலி பல்கலைக்கழகத்தில் சேர்க்கைக்காக 100க்கும் மேற்பட்ட இந்திய மாணவர்கள் கைது செய்யப்பட்ட செய்தி தீயாக பரவியது.

கனடாவில் இருந்து டிம்பிள் கே தொலைபேசி உரையாடலில், 'என் மூளையே இருண்டு கிடக்கிறது. என்னால் முன்னோக்கி செல்லவோ அல்லது பின்நோக்கி செல்லவோ முடியாது" என்று கூறினார்.

அவர் 2017 டிசம்பரில் மாணவர் விசாவில் கனடா வந்தார். அவருக்குத் திருமணமாகி விட்டது. கணவர் இந்தியாவில் இருக்கிறார். இந்த மாணவி நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்தவர். அவருக்கு மூன்று உடன்பிறப்புகள் உள்ளனர். இவரது தந்தை ஜலந்தரில் தையல்காரராக இருக்கிறார், தாயார் இல்லத்தரசி.

அறிவியலில் முதுகலைப் பட்டம் பெற்ற டிம்பிள், நீண்ட நாட்களாக வேலை தேடிக்கொண்டிருந்தார்.

"இரண்டு முறை பேங்க் பரீட்சை எழுதினேன். வெற்றி பெற வில்லை. சலித்துப் போய் இங்கு (கனடா) அப்ளை செய்தேன். இங்காவது ஏதாவது வழி பிறக்கும் என்று... இவ்வளவு படிச்சிருக்கேன். அதுக்கு ஏதாவது பலன் இருக்கணுமில்லையா?" என்கிறார் அவர்.

பல குடும்பங்களில் குறிப்பாக பஞ்சாபில், மேற்கத்திய நாட்டில் வசிப்பது மிகுந்த மரியாதையுடன் பார்க்கப்படுகிறது. ஆனால் பல ஆண்டுகளாக விசா மோசடி வழக்குகள் பதிவாகியுள்ளன.

ஜலந்தர் மற்றும் அது சார்ந்த கல்வி மற்றும் குடிபெயர்வுச் சேவைகளுக்கு பிரஜேஷ் மிஸ்ரா பற்றி உறவினர் ஒருவர் டிம்பிளிடம் கூறினார்.

'அப்போது அவர் மிகவும் நல்லவராக இருந்தார். அவர் எனது எல்லா ஆவணங்களையும் பார்த்தார்." என்கிறார் அவர்.

இறுதியாக நவம்பர் 2017 இல் அவருக்கு கனடா விசா கிடைத்தது.

'ஒரு கல்லூரி எனது ஆவணங்களை ஏற்றுக்கொண்டதாகவும், கல்லூரி சேர்க்கை கடிதம் வந்துவிட்டதாகவும் அவர் என்னிடம் சொன்னார்," என்று கனடாவிலிருந்து ஒரு தொலைபேசி அழைப்பில் அவர் கூறுகிறார்.

டிம்பிள் கனடாவில் கம்ப்யூட்டர் நெட்வொர்க்கிங் படிப்புக்கு விண்ணப்பித்தார். அதற்காக அவர் அப்போது ரொக்கமாக ரூ.12 லட்சம் செலுத்தினார். இதில் அவரது கல்லூரிக் கட்டணம் மற்றும் பிற செலவுகள் அடங்கும், இது கனடாவில் அவரது செலவுகளை ஈடுகட்ட அவரிடம் போதுமான பணம் உள்ளது என்ற எண்ணத்தை ஏற்படுத்தும்.

ஆனால் கனடா வந்து இரண்டு நாட்களில் டிம்பிள் தனது கல்லூரியில் வேலை நிறுத்தம் நடப்பதாகவும், அவர் வேறு கல்லூரிக்கு விண்ணப்பிக்க வேண்டும் என்றும் கூறப்பட்டது. பழைய கல்லூரிக் கட்டணம் திருப்பிக் கொடுக்கப்பட்டது.

டிம்பிள் 2019 இல் கனடாவில் தனது படிப்பை முடித்தார். அவருக்கு வேலை அனுமதிச்சீட்டும் கிடைத்தது. ஆனால் மே 2022 இல், அவர் நிரந்தர வசிப்பிடத்திற்காக விண்ணப்பித்த போது, அவர் முதலில் தேர்வு செய்த கல்லூரியின் ஏற்புக் கடிதம் போலியானது என்று பதில் வந்த போது அவர் அதிர்ச்சியடைந்தார்.

இந்தக் கடிதத்தின் அடிப்படையில், அவர் இந்தியாவில் கனேடிய மாணவர் விசா மற்றும் கனடாவில் சேர்க்கை பெற்றார். இது எப்படிச் சாத்தியமானது என்பது குறித்து இன்னும் பல கேள்விகள் உள்ளன.

### வெளியேற உத்தரவு

குடிவரவு அதிகாரிகளைச் சந்திக்குமாறு டிம்பிளுக்கு உத்தரவு வந்தது. பின்னர் இந்த ஆண்டு ஜனவரியில் விசாரணைக்கு

**போலி ஆவணங்களுடன் கனடாவுக்கு சென்றதால் அவதியுறும் இந்திய மாணவர்களின் நிலை பற்றிய இந்தக் கட்டுரையை, இதுபோன்று இலங்கையிலிருந்து மாணவர் விசா மூலம் கனடா செல்வபவர்களுக்கும் நேரலாம் என்பதால் அவர்கள் எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும் என்பதைக் கருதி இங்கே பிரசுரிக்கின்றோம்.**

பிறகு 'வெளியேற்ற உத்தரவு" வழங்கப்பட்டது.

அதாவது, கனடாவில் இருந்து ஒரு வருடத்திற்குள் வெளியேற்றப்படும் நிலை. ஆனால் உங்களைப் பற்றிய தவறான தகவலைக் கொடுத்திருந்தால், ஐந்து ஆண்டுகளுக்கு கனடாவில் இருந்து நீக்கப்படுவீர்கள்.

குடியேற்ற அதிகாரிகளைச் சந்தித்த டிம்பிள், அது குறித்து, 'நேர்காணலின் போது நான் மிகவும் பயந்தேன், நான் எதுவும் பேசவில்லை. நான் உடனடியாக இந்தியாவுக்கு நாடு கடத்தப்படுவேன் என்று நினைத்தேன்," என்றார்.

இந்த உத்தரவை எதிர்த்து அவர் கனடா உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். அவரது வழக்கறிஞர் ஜஸ்வந்த் சிங் மங்காத் இதேபோன்ற சூழ்நிலையில் சிக்கியுள்ள பல மாணவர்களின் சார்பிலும் வழக்காடுகிறார்.

பெரும்பாலான சந்தர்ப்பங்களில், பெரும் கட்டணத்தில் போலி சேர்க்கைக் கடிதங்கள் வழங்கப்பட்டதாக அவர் கூறுகிறார். சமர்ப்பிக்கப்பட்ட விசா விண்ணப்பங்கள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் விசாக்கள் வழங்கப்பட்டன.

மாணவர்கள் கனடாவிற்கு வந்த பிறகு அல்லது அதற்கு சற்று முன்பு, இந்திய குடிவரவு நிறுவனம் மாணவர்களிடம் சில காரணங்களால் வேறு ஏதேனும் கல்லூரியில் சேர்க்கை பெற வேண்டும் என்று கூறியது.

பல மாணவர்கள் புதிய கல்லூரிகளில் படிப்பை முடித்தனர், வேலை அனுமதிக்கு விண்ணப்பித்தனர், ஆனால் அவர்கள் நிரந்தர வசிப்பிடத்திற்கு விண்ணப்பித்த போது, அவர்களின் முந்தைய கல்லூரிகளின் சேர்க்கைக் கடிதங்கள் போலியானவை என்று கூறப்பட்டது.

டிம்பிள், "விமான நிலையங்களில் குடியேற்ற அதிகாரிகள், விசா வழங்கும் போது, ஆவணங்கள் போலியானவை என்பதைக் கண்டுபிடிக்கவில்லை, நாங்கள் எப்படி கண்டுபிடிப்போம் என்று எதிர்பார்க்கிறார்கள்?" என்று கேட்கிறார்.

இது தொடர்பாக நாங்கள் கல்வி மற்றும் இடப்பெயர்வுச் சேவைகள் நிறுவனம் மற்றும் பிரஜேஷ் மிஸ்ரா ஆகியோரைத் தொடர்பு கொள்ள முயற்சித்தோம், ஆனால் அவர்களைத் தொடர்பு கொள்ள முடியவில்லை.

ஜலந்தர் துணை ஆணையர் ஜஸ்பிரீத் சிங், இது குறித்து தன்னிடம் யாரும் புகார் செய்யவில்லை என்றும், ஆனால் ஊடகங்களில் வெளியான செய்திகளின் அடிப்படையில், ஏஜென்சியின் உரிமத்தைத் தற்காலிகமாக ரத்து செய்துள்ளதாகவும் தெரிவித்தார்.

கனடா பார்டர் சர்வீசஸ் ஏஜென்சி மின்னஞ்சலில், குறிப்பிட்ட நபர்களைப் பற்றி கருத்து தெரிவிக்க மாட்டோம் என்று கூறியது. ஆனால் 2022இல் அவர்களின் அதிகாரிகள் தனியார் கல்லூரி திட்டங்களில் வெளிநாட்டு மாணவர்களுக்குப் பணி அனுமதி பத்திரமாக கனடிய டாலர் 25,000 வழங்கப்படும் திட்டத்தை கண்டுபிடித்தனர். அவர்களுக்கு நிரந்தர குடியிருப்பு வழங்குவதே இதன் ஒரே நோக்கமாக இருந்தது.

இந்த விவகாரத்தால், பலரது நம்பிக்கைகள் தகர்க்கப்பட்டுள்ளன. இந்த மாணவர்கள் வாட்ஸ்அப் குழுவில் தொடர்பில் இருக்கிறார்கள்.

சமந்தீப் சிங் பஞ்சாபில் ஒரு நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்தவர். சிறந்த வாழ்க்கை பெறும் கனவில் கனடாவுக்கு வந்தவர்.

"மாணவர் விசா பெற முயற்சி செய்யத் தொடங்கியபோது, நடைமுறை தெரியாததால், ஒரு முகவரைப் பணியமர்த்தினேன். இதுபோன்ற போலி ஆவணங்களும் பயன்படுத்தப்படும் என்று நான் நினைக்கவில்லை" என்கிறார் அவர்.

(09ஆம் பக்கம் பார்க்க)



# உள்ளூராட்சி சபைகளின் பதவிக் காலம் முடிவுக்கு வந்திருக்கின்றது: இப்போது என்ன நடக்கிறது?

**யூ.எல். மப்றூக்**



இலங்கையிலுள்ள 341 உள்ளூராட்சி சபைகளில் 340 சபைகளின் பதவிக் காலம் மார்ச் 19 நள்ளிரவுடன் முடிவுக்கு வந்திருக்கிறது. எனவே, சட்டப்படி இந்த சபைகள் கலையும் நிலைமை உருவாகியுள்ளது. உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டு சுமார் இரண்டு மாதங்கள் நிறைவடைகின்ற போதிலும், இச்சபைகள் கலைக்கப்படாமல் இருந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

மேற்படி சபைகளுக்கான தேர்தல்கள் 2018 பெப்ரவரி 10ஆம் திகதி நடைபெற்றன. அந்தத் தேர்தலில் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி எனும் கட்சி - எல்பிட்டிய பிரதேச சபையில் போட்டியிடும் பொருட்டு தாக்கல் செய்த வேட்புமனு நிராகரிக்கப்பட்டது. அதற்கு எதிராக அந்தக் கட்சி - உச்ச நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் வழக்கு ஒன்றினை தாக்கல் செய்ததையடுத்து, குறித்த சபையின் தேர்தலை நடத்துவதற்கு நீதிமன்றம் இடைக்காலத் தடையினை விதித்தது. இதன் காரணமாக, அந்த சபை தவிர, ஏனைய 340 உள்ளூராட்சி சபைகளுக்கும் - அறிவிக்கப்பட்ட தேதியில் தேர்தல் நடந்தது.

மேற்குறிப்பிட்ட வழக்கில் - ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் வேட்புமனுவை ஏற்றுக் கொள்ளுமாறு நீதிமன்றம் தீர்ப்பளித்ததது. அதனையடுத்து 2019 அக்டோபர் 11ஆம் தேதி - எல்பிட்டிய பிரதேச சபைக்கான தேர்தல் நடைபெற்றது.

உள்ளூராட்சி சபையொன்றின் பதவிக் காலம் 4 வருடங்களாகும். அந்த வகையில் 2018 மார்ச் 05ஆம் திகதியிடப்பட்டு வெளியான விசேட வர்த்தமானியின்படி, 340 சபைகளின் பதவிக் காலங்களும் 20 மார்ச் 2018 இல் ஆரம்பித்து, 19 மார்ச் 2022இல் நிறைவுக்கு வந்தன.

ஆயினும், உள்ளூராட்சி அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில், 2022 ஜனவரி 10ஆம் திகதியன்று, அப்போதைய அரசாங்க சேவைகள், மாகாண சபைகள், மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் ஜனக்க பண்டார தென்னக்கோன் - மேற்படி சபைகள் அனைத்தினதும் பதவிக் காலத்தை ஒரு வருடத்துக்கு நீட்டித்து, விசேட வர்த்த மானி அறிவித்தல்களை வெளியிட்டார். அதற்கிணங்கவே, இவ்வருடம் மார்ச் 19ஆம் தேதியுடன் இந்த சபைகளின் பதவிக் காலங்கள் நிறைவுக்கு வருகின்றன.

"உள்ளூராட்சி சபையொன்றின் காலம் நிறைவடைந்த பின்னர், அதன் பதவிக் காலத்தை ஒரு வருடம் அல்லது அதற்கு உட்பட்ட காலத்துக்கு நீட்டிப்பதற்கு - மாநகர சபைகள் கட்டளைச் சட்டம், நகர சபைகள் கட்டளைச் சட்டம் மற்றும் பிரதேச சபைகள் சட்டம் ஆகியவற்றின் கீழ் - உள்ளூராட்சி அமைச்சருக்கு அதிகாரம் உள்ளது" என்கிறார் சட்டமுதுமாணி வை.எல்.எஸ். ஹமீட். இதன் அடிப்படையிலேயே, மேற்படி 340 சபைகளின் பதவிக் காலங்களும் 2023 மார்ச் 19ஆம் திகதி வரை நீட்டிக்கப்பட்டன.

இதற்கிணங்கவே - மார்ச் 19 நள்ளிரவுடன் 24 மாநகர சபைகள், 41 நகர சபைகள் மள்றும் 275 பிரதேச சபைகளின் பதவிக் காலங்கள் நிறைவுக்கு வந்தன.






**சபைகள் கலைந்தால் என்ன நடக்கும்?**

உள்ளூராட்சி சபையொன்று கலையுமாயின் அல்லது அதன் தலைவர் மற்றும் துணைத் தலைவர் பதவியில் இல்லாத போது, குறித்த சபையின் அதிகாரம் - அச்சபையின் ஆணையாளர் அல்லது செயலாளர் வசமாகும்.

பிரதேச சபைகள் சட்டம் பிரிவு 09, நகர சபைகள் கட்டளைச் சட்டம் பிரிவு 27 மற்றும் மாநகர சபை கட்டளைச் சட்டம் பிரிவு 286 (அ) ஆகியவற்றின் கீழ், உள்ளூராட்சி சபைகளின் ஆணையாளர்கள் அல்லது செயலாளர்களுக்கு மேற்படி அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என வை.எல்.எஸ். ஹமீட் கூறுகின்றார்.

எடுத்துக்காட்டாக, 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 09ஆவது பிரிவை இங்கு குறிப்பிட முடியும். 'தவிசாளரும் துணைத் தவிசாளரும் பதவி வகிக்காத காரணத்தினால், பிரதேச சபையொன்று அதன் பணிகளை நிறைவேற்ற முடியாமலிருக்குமாயின், மேற்படி பதவிகளின் வெற்றிடங்கள் நிலவும் காலப்பகுதிக்கு, தவிசாளர் மற்றும் துணைத் தவிசாளர் ஆகியோரின் அதிகாரங்களை அச்சபையின் செயலாளர் செயற்படுத்த முடியும்' என அந்தப் பிரிவு கூறுகின்றது.

ஆனால், 2018ஆம் ஆண்டுக்கு முன்னர், உள்ளூராட்சி சபைகள் கலைக்கப்பட்டிருந்த அல்லது அச்சபைகளுக்கு தலைவர்கள் மற்றும் துணைத் தலைவர்கள் பதவி வகிக்காத காலப்பகுதியில், அவற்றின் நிர்வாகங்கள் - அவசர கால நிலைமையின் கீழ், விசேட ஆணையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன எனவும், சட்டமுதுமாணி ஹமீட் குறிப்பிடுகின்றார்.

குறித்த உள்ளூராட்சி சபைகள் அமையப் பெற்றுள்ள பகுதிகளின் பிரதேச செயலாளர்கள் - அப்போது உள்ளூராட்சி சபைகளின் விசேட ஆணையாளர்களாக நியமிக்கப்பட்டிருந்தனர்.

**தேர்தல் நடைபெறாவிட்டால் நிலைமை என்னாகும்?**

இலங்கையில் தேர்தல்களின் மூலம் தெரிவு செய்யப்படுகின்ற மக்கள் பிரதிநிதிகளால் ஆட்சி நடத்தப்படும் மூன்று வகையான உயர் சபைகள் உள்ளன. அவை நாடாளுமன்றம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகளாகும்.

இவற்றில் மாகாண சபைகள் அனைத்தும் கலைக்கப்பட்ட நிலையிலேயே தற்போது உள்ளன. சுமார் 05 வருடங்களுக்கு முன்னர் நாட்டிலுள்ள மாகாண சபைகளின் பதவிக் காலங்கள் முடிவுற்ற போதிலும், இதுவரை அவற்றுக்கான தேர்தல்கள் நடத்தப்படவில்லை. இதன் காரணமாக, மாகாண சபைகளின் அதிகாரங்கள் அந்தந்த மாகாணங்களின் ஆளுநர்கள் வசமாகியுள்ளன.

இந்த நிலையில், உள்ளூராட்சி சபைகளின் பதவிக் காலங்கள் முடிவுக்கு வந்த பிறகும், தற்போது அறிவிக்கப்பட்டுள்ள தேர்தல் நடைபெறாமல் போகுமாயின், அவையும் மக்கள் பிரதிநிதிகளற்ற சபைகளாக மாறிவிடும்.

இந்த நிலைமை ஆபத்தானது என்று பரவலாகக் கூறப்படுகிறது. மக்கள் பிரதிநிதிகளிடமிருக்கும் அதிகாரம், தனி நபரொருவரின் கைகளில் நீண்டகாலம் அகப்படுகின்றமை - ஜனநாயக விரோதமானது என்பதோடு, அந்நிலைமையானது அதிகார துஷ்பிரயோகங்களுக்கு வழிவகுக்கும் எனவும் அரசியல் பார்வையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (பிபிசி)

●

# ஏஜென்சி மோசடி:.....

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவர், கனடாவில் பொறியியல் படிப்புக்கு விண்ணப்பித்து அதற்கு இந்திய ரூபா 14-15 லட்சம் கொடுத்தார். இதற்காக அவர் கடன் வாங்க வேண்டியிருந்தது.

இந்த விவகாரம் குறித்து அவர், 'இங்குள்ள வாழ்க்கை முறை நன்றாக இருக்கிறது, ஆனால் இந்தியாவை விட இங்கு ஒருவர் கடினமாக உழைக்க வேண்டும். தொலைவிலிருந்து பார்த்தால் மிகப் பெரிய ஊதியம் என்ற தோற்றம் இருக்கிறது, உண்மையில் அப்படி இல்லை. சரியான முகவரைத் தேர்ந்தெடுப்பது மிகவும் முக்கியம்" என்கிறார்.

'நாங்கள் ஜலந்தருக்குச் சென்றபோது, எல்லா இடங்களிலும் முகவர்கள் காணப்பட்டனர், ஆனால் அந்த ஏஜென்சிக்கு எதிராக எங்களால் சட்ட நடவடிக்கை எடுக்க முடியாது, ஏனெனில் அவர்கள் எங்கள் கோப்பைத் தயாரித்ததற்கான ஆதாரம் எங்களிடம் இல்லை." என்று அவர் நினைவு கூருகிறார்.

சமந்தீப் கூறுகையில், 'நல்ல வாழ்க்கை முறை அமைய வேண்டும் என்பது தான் கனவு. கனவுகளுக்கும் நிஜத்திற்கும் நிறைய வித்தியாசம் உள்ளது. இங்கிருந்து திரும்பிச் செல்பவர்கள் மிகவும் கடினமாக உழைப்பார்கள். அதை இந்தியாவில் எந்த வெட்கமும் இல்லாமல் செய்தால், பலன் கிடைக்கும்," என்கிறார்.

27 வயதான இந்தர்ஜித் தனது தவறு எதுவும் இல்லாததால் இந்தியாவிற்குத் திரும்பப் போவதில்லை என்று கூறுகிறார்.

டிரக் ஓட்டுநரான இந்தர்ஜித், 'என்ன தீர்வு என்று எங்களுக்குத் தெரியவில்லை. எங்களுக்குத் தெரியாது. இது எங்கள் தவறு அல்ல. நாங்கள் எப்படி திரும்பி வருவோம்" என்று கூறுகிறார்.

மாணவர்களை ஏமாற்றும் ஏஜென்சிகள் மீது இந்திய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது நிபுணர்கள் கருத்து. எந்த நடவடிக்கையும் எடுப்பதற்கு முன் மாணவர்களும் சற்று தெளிவு பெற வேண்டும். நம்பகமான முகவர்கள் மற்றும் கல்லூரிகளைப் பற்றி அறிந்து புரிந்து கொள்வது அவசியம்.

வழக்கறிஞர் ஜஸ்வந்த் சிங் மங்கத், 'இது உங்கள் பணம், உங்கள் வாழ்க்கை, உங்கள் எதிர்காலம்" என்கிறார்.

இது தொடர்பாக கனடாவில் உள்ள இந்திய தூதரகத்திற்கும் இந்தியாவில் உள்ள கனேடிய தூதரகத்திற்கும் மின்னஞ்சல் அனுப்பியுள்ளோம். ஆனால் இதுவரை எந்தப் பதிலும் வரவில்லை. பதில் கிடைத்ததும், அதை இங்கே பகிர்கிறோம்.

●

# நாட்டின் பொருளாதார மீட்சிக்கு எதிர்கட்சிகள் ஆதரவு தரவேண்டும்!

## நிதி இராஜாங்க அமைச்சர் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 23

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு பொருளாதார மீட்சிக்கு ஆரம்பக்கட்ட படிக்கல்லாக உள்ளது. நாணய நிதியத்துடனான ஒப்பந்தம் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஆகவே ஒரு சிறந்த தீர்மானத்தை பாராளுமன்றத்தின் ஊடாக எடுக்க எதிர்க்கட்சிகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியாம்பலபிட்டிய தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற சர்வதேச நாணய நிதியம் தொடர்பில் ஜனாதிபதியின் விசேட உரை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும், போராட்டத்துக்கு மத்தியில் சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு தற்போது கிடைக்கப் பெற்றுள்ளது. சிறீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் வரிச்சலுகை வழங்கியமை, உரம் தடை செய்தமை ஆகிய காரணிகளால் பொருளாதார பாதிப்பு குறுகிய காலத்திற்குள் தீவிரமடைந்துள்ளது. தற்போது அரசாங்கம் என்ற ரீதியில் ஒன்றிணைந்த காரணத்



தால் உண்மையை மறைக்க முடியாது.

கடந்த காலத்தை பற்றிக் கதைத்துக் கொண்டிருந்தால் எதிர்காலம் கேள்விக்கு உள்ளாக்கப்படும். ஆகவே, தற்போதைய பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு தூரநோக்கு கொள்கையுடன் செயற்பட வேண்டும். சர்வதேச நாணய ஒத்துழைப்பு பொருளாதார மீட்சிக்கு ஆரம்பக்கட்ட படிக்கல்லாக அமையும்.

இலங்கை 16 தடவைகள் சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுள்ளது. பொருளாதார பாதிப்பு ஏற்படும் அறிகுறிகள் காணப்பட்ட பின்னணியில்தான் சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு பெற்றுக்கொள்ளப்பட்டது.

ஆனால் 2020 ஆம் ஆண்டு பொருளாதார பாதிப்பு தீவிரமடைந்ததன் பின்னர் ,நாடு வங்குரோத்து என உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டதன் பின்னர் தான் சர்வதேச ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வதற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இதற்கு பல்வேறு காரணிகள் செல்வாக்கு செலுத்தியுள்ளன.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்வது தொடர்பான நிபந்தனை அறிக்கை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் இவ்வாறு நிபந்தனை அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை வங்குரோத்து நிலை அடைந்துள்ள பின்னணியில் வெளிப்படை தன்மையுடன் செயற்பட வேண்டும் என்பதற்காக அறிக்கை பாராளுமன்றத்துக்கு முழுமையாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை முழுமையாக பெற்றுக்கொள்ள அனைத்துத் தரப்பினரும் அரசியல் நோக்கமற்ற வகையில் செயற்பட வேண்டும், ஆகவே பாராளுமன்றம் ஊடாக சிறந்த தீர்மானத்தை எடுக்க சகல எதிர்க்கட்சிகளும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் - என்றார். (ஐ)

# சந்நிதியான் ஆச்சிரமத்தால் கிளிநொச்சி ஆலயத்துக்கு உதவி



யாழ்ப்பாணம், மார்ச் 23

சந்நிதியான் ஆச்சிரமத் தால் ஆனைவிழுந்தான் முத்துமாரி அம்பாள் ஆல யத்துக்கு 8 இலட்சத்து 42 ஆயிரம் ரூபாய் பெறுமதியான வெண்கல காண்டா மணி வழங்கப்பட்டது.

சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் மோகனதாஸ் சுவாமிகள் நேரடியாகச் சென்று வெண்கல காண்டாமணி வழங்கினார். அத்துடன், ஆலயத்தின் தேவைக்காக ஒரு இலட்சம் ரூபாயும் வழங்கி வைக்கப்பட்டது. (ஐ-02)

# மரமொன்று சரிந்தது

அம்பாறை, மார்ச் 23

மரமொன்று வேரோடு சாய்ந்ததில் போக்குவரத்து சிரமங்களை பொதுமக்கள் எதிர்நோக்கியதை அவதானிக்க முடிந்தது.

நேற்று முன் தினம் மதியம் கல்முனை பிரதேச செயலகத்திற்குட்பட்ட அக்கரைப்பற்று - கல்முனை பிரதான வீதியில் வர்த்தக நிலையம் ஒன்றின் முன்னால் இருந்த பாரிய மரமொன்று வேரோடு சாய்ந்ததில் தொலைத்தொடர்பு வயர்கள் துண்டிக்கப்பட்டதுடன் பொது போக்குவரத்தும் தடைப்பட்டது.



சுமார் 6 வருடங்கள் பழைமை வாய்ந்த காயா மரம் ஒன்றே இவ்வாறு பிரதான வீதியில் சரிந்தது. ஆயினும் போக்குவரத்தில் ஈடுபட்ட எவருக்கும் காயமேற்படவில்லை.

தொடர்ந்து சம்பவ இடத்திற்கு சென்ற வீதி அபிவிருத்தி அதிகார சபை ஊழியர்கள் விழுந்த மரத்தை துண்டாக்கி அகற்றினர். (அ)

கல்வி tv CHANNEL-1

**09.03.2023**
**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

கல்வி tv CHANNEL - 2

**09.03.2023**
**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு



# மட்டக்களப்பில் இந்து மதத்தை இழிவுபடுத்துவதை நிறுத்துங்கள்

## இந்துக் குருமார் கண்டன ஆர்ப்பாட்டம்



**மட்டக்களப்பு, மார்ச் 23**

**இந்து மதத்தையும் தெய்வங்களையும் சமூக வலைத்தளங்கள் ஊடாக இழிவுபடுத்துவதை கண்டித்து மட்டக்களப்பு காந்தி பூங்காவில் நேற்று முன்தினம் இந்துக் குருமார்கள் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.**

கிழக்கிலங்கை இந்து குருமார் ஒன்றியத்தின் தலைவர் கணேசா லோகநாத குருக்கள் தலைமையிலான இந்து குருமார் காந்தி பூங்காவில் ஒன்றிணைந்தனர்.

இதன்போது மத ஒற்றுமையை சீர்குலைக்காதே, எந்த மத கடவுள்களையும் அவமதிக்காதே, எமது வழிபாட்டு தெய்வங்ளையும் இழிவுபடுத் திய மத போதகருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவும், கட்டாய மதமாற்றத்தை தடை செய் போன்ற சுலோகங்கள் ஏந்தியவாறு ஓம், ஓம், ஓம் என்ற மந்திரம் செய்தவாறும் ஒரு மணித்தியாலம் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்

இதன்போது அவர்கள் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்- அண்மைக்காலமாக சமூகவலைத்தளங்களிலும் சுவரெட்டிகளிலும் இந்து மதத்தையும் கடவுள்களையும் சில பேதகர்கள் இழிவுபடுத்தி வருவதுடன் கட்டாய மதமாற்றத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

நாங்கள் எவரையும் சீண்டுபவர்கள் அல்லர். எமது மதத்தை யார் இழிவுபடுத்தினாலும் அவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்க நடவடிக்கை எடுப்போம். மத சுதந்திரம் அனைவருக்கும் சமமான ஒன்றாக இருக்கின்றது. ஆனால் பிற மதத்தை தூசிப்பதற்கு எவருக்கும் உரிமையில்லை. எனவே பொலிஸார் எமது மதத்தை இழிவுபடுத்திய அந்த போதகருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்-என்றனர். (அ)



# பொலிஸ் வீரர் தினம் அம்பாறையில்

அம்பாறை, மார்ச் 23

159 வருட பொலிஸ் வீரர் தினம் அம்பாறை மாவட்டத்தில் நேற்று இடம்பெற்றது. இத்தினைத்தையொட்டி பொலிஸ் திணைக்களம் நாடு முழுவதும் பல்வேறு நிகழ்வுகளை ஏற்பாடு செய்தது. மௌன அஞ்சலியைத் தொடர்ந்து பொலிஸ் கொடி ஏற்றப்பட்டதுடன் பொலிஸ் நினைவுத் தூபிக்கு விசேட பொலிஸ் மரியாதை நிகழ்வுகளுடன் மலர் கொத்துக்கள் வைத்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆர்.எம்.டி ஜெயந்த ரட்நாயக்க கலந்து கொண்டு பொலிஸ் கொடியை ஏற்றி அரைக்கம்பத்தில் பறக்க விட்டார்.

தொடர்ந்து உயிரிழந்த பொலிஸ் உத்தியோகத்தர்களை நினைவு கூர்ந்து அகவணக்கம் இடம்பெற்றதுடன் அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தின் முன்னாலுள்ள பொலிஸ் வீரர்கள் நினைவுத் தூபிக்கருகில் பூச்செண்டுகள் வைக்கப்பட்டு நினைவு கூரப்பட்டது. (அ)

# காரைதீவில் விவசாயிகளுக்கு இலவசமாக டீசல் விநியோகம்



அம்பாறை, மார்ச் 23

கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் காரைதீவு பிரதேச விவசாயிகளுக்கு இலவசமாக டீசல் விநியோகம் நேற்று முன் தினம் இடம்பெற்றது.

சீன அரசாங்கம் இலங்கை அரசாங்கத்துக்கு வழங்கிய இலவச டீசலே விவசாயிகளுக்கு இவ்வாறு வழங்கப்பட்டது.

காரைதீவு கமநல சேவை பிரதேசத்துக்குட்பட்ட 118 விவசாயிகளுக்கு 1271 லீற்றர் டீசல் விநியோகிக்கப்பட்டது.

மாவடிப்பள்ளி அமிரலி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதேச செயலாளர் சிவ ஜெகராஜன், கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் மா. சிதம்பரநாதன் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டு டீசலை வழங்கினர்.

# கிரான் பகுதியில் கால்நடைகள் இனந்தெரியாதோரால் கொலை!

மட்டக்களப்பு, மார்ச் 23

மட்டக்களப்பு கிரான் பிரதேச எல்லைக்குட்பட்ட அக்குறாணை மூக்குறையான் குளம் வயல் பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு கால்நடைகள் அடைக்கப்பட்ட காலைகளுக்குள் உட்புகுந்த இனம்தெரியாதோர் கால்நடைகளை வெட்டியும், கூரிய ஆயுதங்களால் தாக்கியும் படுகொலை செய்துள்ளதாக பாற்பண்ணை உரிமையாளர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் மாலை மேய்ச்சலுக்கு சென்று வந்த மாடுகளை காலைகளில் அடைத்துவிட்டு , இரவு தங்கலுக்காக அயல்களில் உள்ள காவல் குடில்களுக்கு சென்று காலை வந்து பார்த்தபோது இவ்வாறு மாடுகள் வெட்டி படுகொலை செய்யப்பட்டு காணப்பட்டன.



4 மாடுகளை இறைச்சிக்காக அறுத்து சென்றுள்ளதாகவும் இதனால் பொருளாதார ரீதியாக தங்கள் பின்னடைவினை சந்தித்து வருவதாகவும் பண்ணையாளர் கூறிணார்.

அத்துடன் தாங்கள் இரவில் தனிமையில் பண்ணை காவல் குடில்களில் தூங்கினால் யானை தாக்குதலுக்கு இலக்காகுவதாகவும் அண்மையில் திகிலிவெட்டை, குடும்பிமலை பிரதேசங்களில் யானை தாக்குதல்களில் இரண்டு பேர் மரணமானதாகவும், இவ் அச்சம் காரணமாகத்தான் பல பண்ணையாளர்கள் ஒன்று சேர்ந்து இரவை கழிப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (அ)

# மட்டக்களப்பு விவசாயிகளுக்கு ரி.எஸ்.பி. உரம் விநியோகம்!



மட்டக்களப்பு, மார்ச் 23

சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவர் அமைப்பு ஐக்கிய நாடுகளின், உணவு மற்றும் விவசாய அமைப்பு என்பன இணைந்து கிழக்கு மாகாண விவசாயிகளுக்கென வழங்கிய ரி.எஸ்.பி உரம் நேற்று முன்தினம் வந்தாறுமூலையில் விநியோகிக்கப்பட்டது.

வந்தாறுமூலை கமநல அபிவிருத்தி சேவை நிலைய உத்தியோகத்தர் இஸ்மாயில் பதூர்தீன் தலைமையில் உரவிநியோகம் இடம்பெற்றது.

ஒரு ஏக்கருக்கு 10 கிலோ வீதம் உரம் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் சிவபூமி திருமந்திர அரண்மனை!

## நாளை திறந்து வைக்கப்படுகின்றது

மட்டக்களப்பு, மார்ச் 23

கிழக்கிலங்கையில் சிவபூமி திருமந்திர அரண்மனை நாளை திறந்துவைக்கப்படவுள்ளதாக செஞ்சோற்செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - மட்டக்களப்பு - கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் இலங்கை சிவபூமி அறக்கட்டளையினால் நிறுவப்பட்டுள்ள திருமந்திர அரண்மனை நாளை சம்பிரதாயபூர்வமாக திறந்த வைக்கப்படவுள்ளது.

மூவாயிரம் தமிழ் பாடல்கள் பல நூறு ஆண்டுகள் பழமைவாய்ந்த வரலாற்றுப் பெட்டகமான திருமந்திரத்தை கையால் உளிகொண்டு மூன்று வருடங்களாக இளைஞர்கள் கருங்கல்லில் செதுக்கியுள்ளனர்.



இந்தப் பாடல்கள் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலய வீதியில் அமைக்கப்பட்டுள்ள திருமந்திர அரண்மனையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

108 சிவலிங்கமும் நடுவில் கருங்கல்லினால் ஆக்கப்பட்ட கோவிலில் முகலிங்கப்பெருமானும் கிழக்கிலங்கையில் முதல்முதலாக வித்தியாசமான முறையில் காட்சியளிக்கின்றன. -என்றார். (அ)



# ஐரோப்பிய வங்கியின் பங்குகள் பாரிய வீழ்ச்சி!

பிரஸ்ஸல்ஸ், மார்ச் 23

ஐரோப்பிய வங்கியின் பங்குகள் பாரிய வீழ்ச்சியை எதிர்கொண்டுள்ளன.

சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள கிரெடிட் சுயிஸ்சி வங்கியை, அதன் முக்கிய போட்டி வங்கியான யூ.பி.எஸ். வாங்கியதனை அடுத்தே இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக உலக வர்த்தக சமூகம் தெரிவித்துள்ளது.

வார இறுதியில் பங்குச் சந்தை மூடுவதற்கு முன்னர் 3 பில்லியன் அமெரிக்க டொலர் நிதியின் மூலம் இந்த பரிவர்த்தனை இடம்பெற்றுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன் காரணமாக 13 சத வீத வீழ்ச்சி உடனடியாக ஏற்பட்டது.

இதன் காரணமாக ஐரோப்பாவின் முக்கிய பங்குச் சந்தைகளில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

இது தவிர, ஆசிய பங்குச் சந்தைகளிலும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக ஹொங்கொங்கின் ஹங் செங்கின் பங்கு, 3 சத வீதத்தாலும், ஜப்பானின் நிக்கி 1 சத வீதத்தாலும் வீழ்ச்சி அடைந்துள்ளது.

இந்த அசாதாரண நிலை மூலம் கிரெடிட் சுயிஸ்சி, வங்கி துறையில் ஏற்பட்ட நம்பிக்கை நெருக்கடியில் மிக முக்கியமான தோல்வியாகும்.

இதன் காரணமாக அமெரிக்காவில் சிலிக்கான் வலி வங்கியின் நிதி நிலையிலும் சரிவு ஏற்பட்டுள்ளது.

அதேவேளை, சர்வதேச ரீதியாக பங்குச்சந்தையில் ஏற்பட்டுள்ள நிச்சயமற்ற தன்மை காரணமாக 2008 ஆம் ஆண்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி ஏற்படுமா? என்பது குறித்து பொருளாதார நிபுணர்கள் எந்த விதமான கருத்துக்களையும் இதுவரை வெளிப்படுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(அ)

# ரஷ்யாவுக்கு அழுத்தங்கள் கொடுக்கவேண்டும் சீனா!

## அமெரிக்கா வலியுறுத்தல்

நியூயோர்க், மார்ச் 23

உக்ரைனில் நடந்து வரும் போர்க்குற்றங்களை தடுக்க ரஷ்ய ஜனாதிபதி புடினுக்கு சீன ஜனாதிபதி ஜின்பிங் அழுத்தம் கொடுக்கவேண்டுமென அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

சீன ஜனாதிபதி ஜின்பிங் 3 நாள் அரச முறை பயணமாக ரஷ்யாவுக்கு சென்றார். அங்கு அவர் தலைநகர் மொஸ்கோவில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் அந்த நாட்டின் ஜனாதிபதி புடினைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

உக்ரைன் போரை முடிவுக்கு கொண்டு வருவது மற்றும் இரு தரப்பு உறவுகளை வலுப்படுத்துவது தொடர்பாக இருநாட்டு தலைவர்களிடையே மீண்டும் விரிவான பேச்சுவார்த்தை நடைபெறும் என அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவித்தன.

இந்த பேச்சுவார்த்தையின் போது, உக்ரைனில் நடந்து வரும் போர்க்குற்றங்களை தடுக்க புடினுக்கு ஜின்பிங் அழுத்தம் கொடுக்கவேண்டுமென அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

வெள்ளை மாளிகையின் தேசிய பாதுகாப்பு கவுன்சில் ஊடக பேச்சாளர் ஜான் கெர்பி இது குறித்து தெரிவிக்கையில்,




உக்ரைனிய நகரங்கள், வைத்தியசாலைகள் மற்றும் பள்ளிகள் மீது குண்டு வீசுவதை நிறுத்தவும், போர்க்குற்றங்கள் மற்றும் அட்டூழியங்களைத் தடுக்கவும் மற்றும் தனது படைகளை திரும்பப் பெறவும் புதினுக்கு, ஜின்பிங் அழுத்தம் கொடுப்பார் என்று நாங்கள் நம்புகிறோம்.

ஆனால் அதற்குப் பதிலாக உக்ரைனின் இறையாண்மை பகுதிக்குள் ரஷ்ய படைகளை விட்டுச் செல்லும் வெறும் சண்டை நிறுத்தத்துக்கான அழைப்புகளை சீனா மீண்டும் வலியுறுத்தும் என்றும், உக்ரைனில் ரஷ்ய படைகள் அகற்றப்படுவதை உறுதி செய்யாத சண்டை நிறுத்தம் ரஷ்யாவின் சட்டவிரோத வெற்றிகளை திறம்பட அங்கீகரிக்கும் என்றும் நாங்கள் கவலைப்படுகிறோம்-என்றார்.

(அ)

# பாகிஸ்தானில் நில நடுக்கம்!

## 9 பேர் உயிரிழப்பு!!



**இஸ்லாமாபாத், மார்ச் 23**

**ஆப்கானிஸ்தான் மற்றும் வடக்கு பாகிஸ்தானை உலுக்கிய 6.5 ரிச்டர் அளவிலான நிலநடுக்கத்தில் குறைந்தது 9 பேர் கொல்லப்பட்டனர்.**

நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தனர்.பாகிஸ்தான் முழுவதும், இந்திய தலைநகர் புதுடில்லி வரை நிலநடுக்கம் உணரப்பட்டது.

பூகம்பத்தின் மையம் ஆப்கானிஸ்தானின் ஜிர்மில் இருந்து தென்கிழக்கே 40 கிமீ (25 மைல்) தொலைவில், பாகிஸ்தான் மற்றும் தஜிகிஸ்தானின் எல்லைகளுக்கு அருகில் இருப்பதாக அமெரிக்க புவியியல் ஆய்வு தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானின் வானிலை ஆய்வு மையம் 6.8 ரிச்டர் அளவில் நிலநடுக்கம் பதிவானதாக அறிவித்தது.

பின்னர் ஆப்கானிஸ்தானுடனான நாட்டின் எல்லையில் உள்ள இந்து குஷ் பகுதியில் 3.7 ரிச்டர் அளவில் பின்னதிர்வு பதிவாகியுள்ளது.

பாகிஸ்தானின் கைபர் பக்துன்க்வா மாகாணத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தின் விளைவாக 9 பேர் கொல்லப்பட்டார்.

தலைநகர் இஸ்லாமாபாத்திலிருந்து வடமேற்கே 180 கிமீ (112 மைல்) தொலைவில் உள்ள ஸ்வாட் மாவட்டத்தில் நிலச்சரிவுகள் சேதத்தை ஏற்படுத்தியுள்ளன.

பாகிஸ்தானின் அவசர சேவைகளின் செய்தித் தொடர்பாளர் பிலால் பைசியின் கூற்றுப்படி, அதிர்ச்சியில் கைபர் பக்துன்க்வா மாகாணத்தின் ஸ்வாட் பள்ளத்தாக்கு பகுதியில் 100 க்கும் மேற்பட்ட நபர்கள் மருத்துவமனைகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

வடமேற்கு பாகிஸ்தானின் பல்வேறு பகுதிகளில் கூரைகள் இடிந்து விழுந்ததில் ஒன்பது பேர் கொல்லப்பட்டனர். மேலும் நிலநடுக்கத்தில் டசின் கணக்கானவர்கள் காயமடைந்தனர் என்று பைசி கூறினார்.

கைபர் பக்துன்க்வா மாகாணத்தில் உள்ள ஸ்வாட் பள்ளத்தாக்கில் உள்ள மருத்துவமனைகள் குறைந்தது 250 நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்தன. அவர்களில் 15 பேர் சிறிய காயங்களுக்கு ஆளாகியுள்ளனர். 200 க்கும் மேற்பட்டோர் மயக்கமடைந்துள்ளனர். மாகாணத்தின் மற்ற பகுதிகளில் 52 பேர் காயமடைந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். (அ)

# டொனால்ட் ட்ரம்ப் கைது வைரலாகிவரும் படங்கள்!

வாஷிங்டன், மார்ச் 23

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கைது செய்யப்படுவாரா என்ற கேள்வியுடன் பலரும் காத்திருக்கும் நிலையில்,ட்ரம்ப் கைது செய்யப்படுவது, குற்றப்பத்திரிகை தாக்கல், தடுப்புக்காவலில் வைக்கப்பட்டதாகக் கூறப்படும் படங்கள் ஏற்கனவே வைரலாகி வருகின்றன.

ட்ரம்ப் இன்னும் கைது செய்யப்படவில்லையே, எப்படி படங்கள் கசிந்தன என பலரும் குழப்பமடையக்கூடும்.

ட்ரம்பின் கைது எப்படி இருக்கும் என்பதைப் பற்றி ஏ.ஐ-உருவாக்கிய நையாண்டித்தனமான படங்களே இப்பொழுது வைரலாகி வருகின்றன.



செயற்கை நுண்ணறிவால் (AI) உருவாக்கப்பட்ட படங்கள் சமூக ஊடக பயனர்களால் நல்ல வரவேற்பைப் பெற்று காட்டுத்தீ போல் பரவி வருகிறது, நெட்டிசன்கள் "ஏஐ நன்மைக்காகப் பயன்படுத்தப்படுகிறது" என்பதற்கு எடுத்துக்காட்டு என்று பாராட்டுகிறார்கள்.

ஏ.ஐ-உருவாக்கிய படங்கள் ட்ரம்ப் பல்வேறு இக்கட்டான நிலையில் இருப்பதைக் காட்டுகின்றன. ஒன்றில், முன்னாள் ஜனாதிபதி பொலிஸாரிடம் இருந்து ஓடுவதைக் காணலாம், மற்றொன்றில், அவர் அவர்களுடன் மோதலில் ஈடுபட்டதாக சித்தரிக்கப்பட்டுள்ளது. மற்றொன்று அவர் படைகளால் அழைத்துச் செல்லப்படுவதை சித்தரிக்கிறது.

தொழிலதிபர், முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், ஆபாச நட்சத்திரத்திற்கு பணம் செலுத்தியதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் கைது நடவடிக்கையை எதிர்கொள்கிறார்.

ஆபாச அழகியுடன் உல்லாசமாக இருந்த சம்பவத்தை ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் பகிரங்கப்படுத்தாமல் இருக்க ஆபாச அழகிக்கு ட்ரம்ப் பணம் வழங்கினார்.

ஆபாச நட்சத்திரமான ஸ்டோர்மி டேனியல்ஸ் என்ற ஸ்டீபனி கிளிபோர்ட்க்கு 130,000 டொலர் பணம் கொடுத்ததாக சர்ச்சை கிளம்பியுள்ளது.

ட்ரம்பின் 2016 ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தின்போது டேனியல்ஸிக்கு அம்மாவை வைத்து பணம் கொடுக்கப்பட்டதாக கூறப்படுகின்றது.

(அ)

# தண்ணீர் பாவனை; ஐ.நா. எச்சரிக்கை

ஜெனிவா, மார்ச் 23

உலகளாவிய தண்ணீர் நெருக்கடி அதிகரித்தல் மற்றும் தண்ணீர் பற்றாக்குறை ஏற்படுவதற்கான உடனடி அச்சுறுத்தல் தொடர்பில் ஐ.நா எச்சரிக்கை விடுத்துள்ளது.

அளவுக்கதிகமான பயன்பாடு மற்றும் காலநிலை மாற்றத்தால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக ஐ.நாவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தண்ணீரை விரயமாக்குவதில் உலகம் அபாயகரமான பாதையில் கண்மூடித்தனமாகச் சென்று கொண்டிருப்பதாக அந்த அறிக்கை சாடியுள்ளது.

1977ஆம் ஆண்டின் பின்னர் நடைபெறவுள்ள முதலாவது ஐ.நா தண்ணீர் மாநாட்டுக்கு முன்னதாக இந்த அறிக்கை வெளியாகியுள்ளது.

(அ)



## மும்பை இந்தியன்ஸிடம் வீழ்ந்தது பெங்களூர் அணி!

மும்பை, மார்ச் 23

றோயல் சலஞ்சர்ஸ் பெங்ளூர் அணிக்கு எதிராக மும்பையில் நடைபெற்ற போட்டியில் 4 விக்கெட்களால் மும்பை இந்தியன்ஸ் அணி வெற்றிபெற்றது.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பெங்களூார் 20 ஓவர்களில் 9 விக்கெட்களை இழந்து 129 ஓட்டங்களைப் பெற்றது.

எலிஸ் பெரி (29), ரிச்சா கோஷ் (29), ஸ்மிருதி மந்தனா (24) ஆகிய மூவரே 20 ஓட்டங்களுக்கு மேல் பெற்றனர்.

மும்பையின் பந்துவீச்சில் அமேலியா கேர் 22 ஓட்டங்களுக்கு 3 விக்கெடகளையும் நெட் சிவர்-ப்றன்ட் 24 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் இஸி வொங் 26 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மும்பை இண்டியன்ஸ் 16.3 ஓவர்களில் 6 விக்கெட்களை இழந்து 129 ஓட்டங்களைப் பெற்ற வெற்றியீட்டியது.

அமெலியா கேர் (31), யஸ்டிகா பாட்டியா (30), ஹெய்லி மத்தியூஸ் (24) ஆகிய மூவரே துடுப்பாட்டத்தில் பிரகாசித்தனர்.

பந்துவீச்சில் கனிக்கா அஹூஜா 5 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களைக் கைப்பற்றினார்.

### ஒருநாள் உலகக் கிண்ண நேரடி தகுதி:

# வென்றாக வேண்டிய கட்டாயத்தில் நியூசிலாந்தை எதிர்க்கும் இலங்கை

ஹமில்டன், மார்ச் 23

நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் முழுமையான தோல்வி அடைந்த இலங்கை, அதே அணிக்கு எதிராக மற்றொரு சவாலை சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் தொடரில் எதிர்கொள்ளவுள்ளது.

இந்தத் தொடர் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிக்கு முன்னோடியாக நடைபெறும் உலகக் கிண்ண சுப்பர் லீக் தொடராக அமைவதாலேயே இலங்கை மற்றொரு சவாலை எதிர்கொள்ளவுள்ளது.

இந்தியாவில் வரும் நவம்பர் மாதம் 21ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள 13ஆவது உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் பங்பற்றுவதற்கு இலங்கை நேரடி தகுதி பெறவேண்டுமானால் நியூசிலாந்துக்கு எதிரான 3 போட்டிகள் கொண்ட சர்வசேத ஒருநாள் கிரிக்கெட் தொடரில் முழுமையாக வெற்றிபெறவேண்டும்.

தரவரிசை அடிப்படையில் முதல் 7 இடங்களில் இருக்கும் இங்கிலாந்து (155 புள்ளிகள்), நியூசிலாந்து (150), இந்தியா (139), பங்களாதேஷ் (130), பாகிஸ்தான் (130), அவுஸ்திரேலியா (120) ஆப்கானிஸ்தான் (118) ஆகியன ஏற்கனவே உலகக் கிண்ண சுப்பர் லீக் சுற்றுக்கு தகுதி பெற்று விட்டன.

எட்டாவதாக எந்த நாடு தகுதி பெறும் என்பதைத் தீர்மானிக்கும் நியூசிலாந்து - இலங்கை இடையிலான தொடரும் தென்னாபிரிக்காவுக்கும் நெதர்லாந்துக்கும் இடையிலான தொடரும் நடைபெறவுள்ளன.

அணிகள் நிலையில் 77 புள்ளிகளுடன் 10ஆவது இடத்தில் இருக்கும் இலங்கை 3 போட்டிகளிலும் வெற்றிபெற்றால் 107 புள்ளிகளுடன் உலகக் கிண்ண சுப்பர் லீக்குக்கு தகுதி பெறும்.

இலங்கை ஒரு போட்டியில் தோல்வி அடையும் அதேவேளை, 78 புள்ளிகளுடன் 9ஆம் இடத்தில் இருக்கும் தென்னாபிரிக்கா 2 போட்டிகளிலும் வெற்றி பெற்றால் அதிகபட்சமாக 98 புள்ளிகளைப் பெற்று 8ஆவது நாடாக உலகக் கிண்ணத்தின் சுப்பர் லீக் சுற்றுக்கு முன்னேறும்.

தற்போது 8ஆவது இடத்தில் இருக்கும் மேற்கிந்தியத் தீவுகள் 88 புள்ளிகளைப் பெற்றுள்ளதுடன் அந்த அணியின் போட்டிகள் யாவும் நிறைவடைந்துள்ளன. ஒரு



வேளை, தென்னாபிரிக்காவும் இலங்கையும் தலா 2 போட்டிகளில் தோல்வி அடைந்தால் மேற்கிந்தியத் தீவுகளுக்கு உலகக் கிண்ணத்தில் நேரடியாக விளையாட வாய்ப்பு கிடைக்கும்.

எனினும் தென்னாபிரிக்காவை நெதர்லாந்து வீழ்த்தும் என எதிர்பார்க்க முடியாது. நியூசிலாந்துக்கும் இலங்கைக்கும் இடையிலான 3 போட்டிகள் கொண்ட தொடர் ஒக்லண்ட், ஈடன் பார்க் விளையாட்டரங்கில் 25ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ள முதலாவது போட்டியுடன் ஆரம்பமாகவுள்ளது.

இரண்டாவது போட்டி கிறைஸ்ட்சேர்ச், ஹெக்லி ஓவல் விளையாட்டரங்கில் 28ஆம் திகதியும் கடைசிப் போட்டி ஹமில்டன் செடன் பார்க் விளையாடடங்கில் 31ஆம் திகதியும் நடைபெறும். இலங்கைக்கும் நியூசிலாந்துக்கும் இடையில் விளையாடப்பட்டுள்ள 99 சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் 49 - 41 என நியூசிலாந்து முன்னிலையில் இருக்கிறது. 8 போட்டிகளில் முடிவு கிடைக்கவில்லை. ஒரு போட்டி சமநிலையில் முடிவடைந்துள்ளது.

நியூசிலாந்தில் இலங்கை 12 போட்டிகளில் மாத்திரமே வெற்றிபெற்றுள்ளது. கடைசியாக இரண்டு அணிகளும் 2019இல் நியூசிலாந்தில் சந்தித்துக் கொண்டபோது 3 - 0 என்ற ஆட்டக்கணக்கில் நியூசிலாந்து முழுமையான வெற்றியை ஈட்டியிருந்தது.

தென்னாபிரிக்காவுக்கும் நெதர்லாந்துக்கும் இடையிலான 2 போட்டிகள் கொண்ட சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் தொடர் செஞ்சூரியனில் மார்ச் 31ஆம் திகதியும் ஏப்ரல் 2ஆம் திகதியும் நடைபெறவுள்ளன.

### ஜாம்பவான் லீக் தொடர்:

# தரங்க, டில்ஷான் மிரட்டல் ஏசியா லயன்ஸ் சம்பியன்!

டோஹா, மார்ச் 23

ஜாம்பவான் லீக் இருபது - 20 தொடரில் ஷகீட் அப்ரிடி தலைமையிலான ஏசியா லயன்ஸ் சம்பியன் பட்டத்தை சுவீகரித்தது.

கட்டாரின் டோஹாவில் நடந்த இந்தத் தொடரில் உலக ஜாம்பாவன் அணிக்கு எதிராக உபுல் தரங்க, திலகரட்ண டில்ஷான் அரைச் சதங்கள் குவித்து, 10 ஓவர்களில் 115 ஓட்டங்களை பெற்றிருந்தனர். இது ஏசியா அணி 7 விக்கெட்களால் வெற்றி பெற உதவியது.



திங்கட்கிழமை நடந்த இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஷேன் வற்சன் தலைமையிலான உலக ஜாம்பவான் அணி 20 ஓவர்களில் 4 விக்கெட்களை இழந்து 147 ஓட்டங்களைப் பெற்றது.

பவர் ப்ளே ஓவர்கள் நிறைவடைவதற்கு முன்னர் மோர்னி வென் வைக் (0), ஷேன் வொட்சன் (0), லெண்ட்ல் சிம்மன்ஸ் (17) ஆகிய மூவரும் ஆட்டமிழக்க உலக ஜாம்பவான் அணி 19 ஓட்டங்களை மாத்திரம் பெற்று தடுமாறிக்கொண்டிருந்தது.

ஆனால், ஜக் கலிஸ், றோஸ் ரெய்லர் ஆகிய இருவரும் மிகவும் திறமையாக துடுப்பெடுத்தாடி 4ஆவது விக்கெட்டில் 68 பந்துகளில் 92 ஓட்டங்களைப் பகிர்ந்து அணியை வலுவான நிலையில் இட்டனர்.

றோஸ் ரெய்லர் 32 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்த சொற்பநேரத்தில் போல் கொலிங்வூட் 6 ஓட்டங்கள் பெற்ற நிலையில் உபாதைக்கு உள்ளாகி ஓய்வுபெற்றார்.

கடைசிவரை அதிரடியாக துடுப்பெடுத்தாடிய ஜக் கலிஸ் 54 பந்துகளை எதிர்கொண்டு 5 பௌண்ட்ரிகள், 3 சிக்ஸர்கள் அடங்கலாக 78 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழக்காதிருந்தார். மறுபக்கத்தில் சமித் பட்டேல் 3 ஓட்டங்களுடன் ஆட்டம் இழக்காதிருந்தார்.

ஏசியா லயன்ஸ் பந்துவீச்சில் 2 விக்கெட்களையும் திசர பெரேரா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

148 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஏசியா லயன்ஸ் 16.1 ஓவர்களில் 3 விக்கெட்களை இழந்து 148 ஓட்டங்களைப் பெற்று 7 விக்கெட்களால் வெற்றியீட்டியது.

உபுல் தரங்கவும் திலக்கரட்ன டில்ஷானும் திறமையாகத் துடுப்பெடுத்தாடி 69 பந்துகளில் 115 ஓட்டங்களைப் பகிர்ந்து ஏசியா லயன்ஸ் அணிக்கு சிறந்த ஆரம்பத்தை இட்டுக்கொடுத்தனர்.

28 பந்துகளை மாத்திரம் எதிர்கொண்ட உபுல் தரங்க 5 பௌண்ட்ரிகள், 3 சிக்ஸர்களுடன் 57 ஓட்டங்களை குவித்தார்.

அவருக்கு பக்கபலமாக ஆனால் நிதானத்துடன் துடுப்பெடுத்தாடிய திலக்கரட்ண டில்ஷான் 42 பந்துகளில் 8 பௌண்ட்ரிகளுடன் 58 ஓட்டங்களைப் பெற்றார். அவரைத் தொடர்ந்து அப்துர் ராஸாக் 3 ஓட்டங்களுடன் ஆட்டம் இழந்தார்.

மொஹமத் ஹபீஸ், மிஸ்பா உல் ஹக் ஆகிய இருவரும் ஆட்டம் இழக்காமல் தலா 9 ஓட்டங்களைப் பெற்று ஏசியா லயன்ஸ் வெற்றியை உறுதிப்படுத்தினர்.

## மகளிர் பிறீமியர் லீக் இறுதியாட்டத்தில் டில்லி!

மும்பை, மார்ச் 23

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை நடத்தும் மகளிர் பிறீமியர் லீக் இருபது 20 தொடரில் அணிகள் நிலையில் முதலாம் இடத்தைப் பெற்ற டில்லி கப்பிட்டல்ஸ் நேரடியாக இறுதிப் போட்டியில் விளையாடத் தகுதிபெற்றுள்ளது.

நேற்று முன்தினம் நிறைவுபெற்ற லீக் சுற்றைத் தொடர்ந்து டில்லி கப்பிட்டல்ஸ் 12 புள்ளிகளுடன் நிகர ஓட்ட வேக அடிப்படையில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.

மும்பை இந்தியன்ஸும் 12 புள்ளிகளைப் பெற்றுள்ள போதிலும் நிகர ஓட்ட வேக அடிப்படையில் 2ஆம் இடத்தில் இருக்கிறது. உத்தர பிரதேச வாரியர்ஸ் 8 புள்ளிகளுடன் 3ஆம் இடத்தில் உள்ளது.

இந் நிலையில் மும்பை இந்தியன்ஸும் உத்தர பிரதேச வாரியர்ஸும் நாளை வெள்ளிக்கிழமை வெளியேற்றும் போட்டியில் விளையாடவுள்ளன. இதில் வெற்றிபெறும் அணி, இறுதிப் போட்டியில் டில்லி கப்பிட்டல்ஸை வரும் ஞாயிற்றுக்கிழமை எதிர் கொள்ளும்.



# இலாபம் ஈட்டும் நிறுவனங்களை ஏன் விற்பனை செய்யவேண்டும்?

## விமல் வீரவன்ஸ எம்.பி. சபையில் கேள்வி

**கொழும்பு, மார்ச் 23**

**இலாபமீட்டும் நிறுவனங்களை எதற்காக விற்பனை செய்வதற்கு முயற்சிக்கின்றீர்கள் என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச கேள்வி எழுப்பியுள்ளார்.**



நேற்றைய பாராளுமன்ற அமர்வின் போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் இந்த கேள்வியை முன்வைத்து உரையாற்றும்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இதன்போது கருத்துரைத்த விமல் வீரவன்ஸ எம்.பி, ஜனாதிபதியிடம் இந்த கேள்வியை முன்வைக்கின்றேன். அவர் முன்வைத்த யோசனைகளுக்கு மேலாக கடந்த அமைச்சரவையில் ஒரு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அதாவது, இலங்கை ரெலிக்கொம் நிறுவனத்திடம் உள்ள அரசாங்கத்தின் ஒரு பங்கையும் லங்கா வைத்தியசாலையின் ஒரு பங்கையும் விற்பனை செய்வதற்கு அந்த அமைச்சரவையில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது - என்றார்.

இதன்போது ஏனைய எம்.பிக்கள் குறுக்கிட்ட நிலையில் அதற்கு பதிலளித்த விமல் வீரவன்ஸ எம்.பி, நான் கூறுவதை முதில் செவிமடுங்கள். சர்வதே நாணய நிதியம் உங்களுக்கு ஊசியை ஏற்றியதற்காக பறப்பதற்கு முயற்சிக்க வேண்டாம்.

இவ்வாறான முட்டாள்கள் இருப்பார்கள் என்று சர்வதேச நாணய நிதியத்துக்கு தெரிந்திருந்தால் ஒரு சதத்தையேனும் வழங்கியிருக்காது.

தயவு செய்து எனது கேள்வியை கேட்பதற்கு இடமளியுங்கள்-என்றார்.

இதன்போது சபையில் கூச்சலிடப்பட்டது. பாராளுமன்ற உறுப்பினர்களை அமைதியாக இருக்குமாறு சபாநாயகர் அறிவுறுத்தினார்.

மீண்டும் கருத்துரைத்த விமல் வீரவன்ஸ எம்.பி, எனது கேள்வி இதுவே! ஜனாதிபதி நீங்கள் விரும்பினால் இதற்கு பதிலளியுங்கள்.

விரும்பினாலோ, விரும்பாவிட்டாலோ நட்டமடையும் நிறுவனங்களையே விற்பனை செய்யப் போவதாக இதற்கு முன்பு கூறினீர்கள்.

தற்போது ஏன் இலாபமீட்டும் நிறுவனங்களை விற்பனை செய்வதற்கு முயற்சிக்கின்றீர்கள்.

அவ்வாறு இலாபம் ஈட்டும் நிறுவனங்களை விற்பனை செய்தால் இங்குள்ள பணம் டொலர்களாக மாற்றப்பட்டு வெளிநாட்டு முதலீட்டாளர்களது கைகளுக்கு செல்லும்.

அது அந்நிய செலாவணியை அதிகரிக்குமா குறைக்குமா?

சர்வதேச நாணய நிதியத்திடம் கேட்டாவது எனக்கு இதற்கான பதிலை தாருங்கள் - என்றார். (அ-கே)

# முல்லைத்தீவில் சிறப்பாக இடம்பெற்ற குருதிக்கொடை



முல்லைத்தீவு, மார்ச் 23

வட மாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சங்கத்தின் ஏற்பாட்டில் முல்லைதீவு மாவட்ட செயலகத்தில் குருதிக் கொடை நிகழ்வு ஒன்று நேற்று முன்தினம் இடம்பெற்றது.

நேற்று முன்தினம் காலை 9.30 மணிக்கு முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்த குருதிக்கொடை நிகழ்வு மாலை வரை தொடர்ச்சியாக இடம்பெற்றது.

இதன்போது முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு திணைக்களங்களின் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பல்வேறு தரப்பினரும் இணைந்து குருதிக்கொடையில் ஈடுபட்டனர்.

இதன்போது சுமார் 60 பேர் வரை குருதிக் கொடை வழங்கினர்.

அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கம் தங்களின் உறுப்பினர்களின் உரிமைக்காக மட்டுமின்றி பொது மக்களின் நலன் சார்ந்த செயல் திட்டங்களையும் முன்னெடுக்கும் நோக்கோடு இந்த குருதிக் கொடை நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும்,

இதேவேளை இந்த செயற்திட்டம் தொடர்ச்சியாக ஏனைய மாவட்டங்களிலும் முன்னெடுக்கவுள்ளதாகவும். வடமாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சங்க தலைவர் தெரிவித்தார்.

# மன அழுத்தம், பொருளாதார பிரச்னையால் சேவையை விட்டு வெளியேறும் பொலிஸார்!

கொழும்பு, மார்ச் 23

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 260 பேர் பொலிஸ் சேவையில் இருந்து அறிவித்தல் எதனையும் வழங்காமல் விலகியுள்ளதாக பொலிஸ் தலைமையக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவர்களில் பெரும்பாலானோர் பொலிஸ் கான்ஸ்டபிள்கள் மற்றும் சார்ஜன்ட்கள் என பொலிஸ் தலைமையக வட்டாரங்கள் தெரிவித்தன.

இவர்களில் பலர் மன அழுத்தம், பொருளாதார பிரச்னைகள், அதிக வேலை மற்றும் கடமையின் அழுத்தம், ஓய்வின்மை போன்ற காரணங்களால் பொலிஸ் சேவையை விட்டு விலகியுள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் மேலும் கூறின.

இவர்கள் அனைவரையும் பொலிஸ் சேவையை விட்டு வெளியேறுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த தகவல்கள் தெரிவித்தன.

2022ஆம் ஆண்டில் மாத்திரம் 900 பொலிஸ் உத்தியோகத்தர்கள் பொலிஸ் சேவையிலிருந்து விலகிச் சென்றுள்ளனர்.

# உலக நீர்த் தினத்தை முன்னிட்டு முல்லை கடற்கரை சுத்தப்படுத்தல்



முல்லைத்தீவு, மார்ச் 23

மார்ச் 22 உலக நீர் தினத்தை முன்னிட்டு கரிதாஸ் வன்னி கியூடெக் நிறுவனத்தால் முல்லைத்தீவு நகர கடற்கரை சுத்தப்படுத்தும் நிகழ்வு நேற்றுக் காலை முன்னெடுக்கப்பட்டது.

இலங்கையின் இயற்கை சூழலைப் பாதுகாப்போம் என்ற தொனிப்பொருளில் கரிதாஸ் வன்னி கியூடெக் நிறுவனம் பல்வேறுபட்ட சூழல் நேய வேலைத்திட்டங்களை முன்னெடுத்துவரும் நிலையில் அதன் ஒரு அங்கமாக இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

உலக நீர் தினமான நேற்று நீரின் அவசியத்தை வலியுறுத்தியும் சூழலை தூய்மையாக பேணும் வகையிலும் இந்த சுத்தப்படுத்தல் நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மற்றும் முள்ளியவளை கிளிநொச்சி மாவட்டத்தின் முழங்காவில் பிரதேச மக்கள் கலந்து கொண்டனர். (அ)

# முத்துஐயன்கட்டு குளத்தின் கீழ் 3,320 ஏக்கர்களில் நெற்செய்கை

முல்லைத்தீவு, மார்ச் 23

2023 ஆம் ஆண்டு சிறுபோக நெற்செய்கையை முத்து ஐயன் கட்டு குளத்தின் கீழ் 3320.5 ஏக்கரிலும், உப உணவு பயிர்ச்செய்கையை 739 ஏக்கரிலும் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகர் பிரிவுக்குட்பட்ட முத்து ஐயன்கட்டு குளத்தின் கீழான சிறுபோகச் செய்கை தொடர்பான கூட்டம் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திரு. க.விமலநாதன் தலைமையில் நேற்று முன்தினம் ஒட்டுசுட்டான் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் அலுவலகத்தில் நடைபெற்றது.

2023 ஆம் ஆண்டு சிறுபோக நெற்செய்கையை முத்தயன்கட்டு குளத்தின் கீழ் 3320.5 ஏக்கரிலும், உப உணவு பயிர்ச்செய்கையை 739 ஏக்கரிலும் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.



இதற்கமைய ஏப்ரல் 3ஆம் திகதி முத்தயன்கட்டு குளத்தின் நீர் திறந்துவிடப்படவுள்ளது.

இந்த பயிர்ச்செய்கைக்கான காலம் மூன்றரை மாதங்களாகும். தற்போது குளத்தின் நீர்மட்டம் 20 அடியாக காணப்படுகின்றது.

இந்தக் கூட்டத்தில் மேலதிக மாவட்ட அரசாங்க அதிபர் எஸ். குணபாலன், ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர், கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் உதவி ஆணையாளர், பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர், பிரதி நீர்ப்பாசன பொறியியலாளர், முத்தயன்கட்டு குளத்தின் பொறியியலாளர்,விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம அலுவலகர்கள், நெக்டா நிறுவனத்தின் அதிகாரிகள், கமக்கார அமைப்புக்களின் பிரதிநிகள் விவசாயிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (அ)

# நாகர்கோவில் மேற்கில் பத்து படகுகள் தீக்கிரை

## பொலிஸார் தீவிர விசாரணை

யாழ்ப்பாணம், மார்ச் 23

வடமராட்சி கிழக்கு, நாகர் கோவில் மேற்கில் அன்ரனி அருள்ராஜ் என்பவருக்குச் சொந்தமான 10 படகுகள் நேற்று அதிகாலை தீக்கிரயாக்கப்பட்டுள்ளன.

தீக்கிரையாக்கப்பட்டதற்கான காரணம் மற்றும் சந்தேக நபர்கள் இதுவரை அறியப்படவில்லை .

இது தொடர்பாக பருத்தித்துறை பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ-02)

## அரசியல் வேறுபாடுகள்...

தினம் குறித்து கடுகளவும் நம்பிக்கை இல்லாதிருந்த நாடு. இவ்வாறான பின்னணியில் பொறுப்பை ஏற்க எவரும் விரும்ப வில்லை. சிலர் பின்வாங்கினார்கள். சிலர் ஜாதகம் பார்க்க நேரம் கேட்டார்கள். சிலர் நழுவிச் சென்றனர். சிலர் பயந்தார்கள். அவர்களில் யாரும் பொறுப்பை ஏற்க முன்வராத நிலையில் என்னிடம் பொறுப்பேற்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

எந்த நிபந்தனையு மின்றி இந்த சவாலை ஏற்றுக்கொண்டேன். பாராளுமன்றத்தில் எனக்கு அதிகாரம் இருக்கவில்லை. எனக்கென்று எம். பிக்கள் யாரும் இருக்கவில்லை. ஆனால், இவை எதுவும் இல்லாவிட்டாலும், எனக்கு ஒரே ஒரு பலம் இருந்தது. நான் பிறந்து, வளர்ந்து, படித்த எனது நேசத்துக்குரிய நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப முடியும் என்ற நம்பிக்கை மட்டுமே இருந்தது.

சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கையுடன், இளைஞர்களின் எதிர்காலத்தை கட்டியெழுப்ப எங்களுக்கு ஒரு பாதை திறக்கப்பட்டுள்ளது. மீண்டும் எமது தாய்நாட்டை கட்டியெழுப்புவதற்கான வாய்ப்புகள் உருவாகியுள்ளன.

இந்த கடன் வசதியின் கீழ், 4 ஆண்டுகளில் சுமார் 300 கோடி அமெரிக்க டொலர்கள் உதவியைப் பெறுவோம். அதன்முதல் தவணையின் கீழ் 33 கோடி அமெரிக்க டொலர்கள் கிடைக்கிறது. உலக வங்கி மற்றும் ஏனைய கடன் வழங்குபவர்களிடமிருந்து மேலும் 700 கோடி டொலர் துரித கடன் உதவியை நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

ஐ. எம். எவ். நீடிக்கப்பட்ட கடன் வசதியை நெருப்பு வட்டியுடன் கூடிய மற்றொரு கடன் என்று சிலர் விபரிக்கிறார்கள். இந்தப் பணத்தில் நாட்டின் முழுக் கடனையும் அடைக்க முடியாது என்று கூக்குரலிடுபவர்களும் இருக்கிறார்கள். இத்தகைய கருத்துக்கள் அவர்களின் அறியாமையையே காட்டுகிறது. அல்லது அப்பாவி மக்களை பொய் சொல்லி ஏமாற்றி அரசியல் ஆதாயங்களை பெற்றுக்கொள்ள அவர்கள் முயற்சிக்கிறார்கள்.

ஐ. எம். எவ். நீடிக்கப்பட்ட கடன் என்பது வீழ்ந்த நாட்டை மீட்டெடுக்க வழங்கப்படும் வசதியாகும். அதற்கான தளமும் தயார் செய்யப்பட்டுள்ளது. இந்த வசதி மூலம் மீண்டும் சர்வதேச அங்கீகாரம் கிடைத்துள்ளது. இலங்கை இனி வங்குரோத்தடைந்த நாடாக இருக்காது என்பதற்கு உத்தரவாதம் கிடைத்துள்ளது. எமது உள்நாட்டு வங்கிகளுக்கு சர்வதேசத்தின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. சர்வதேச நிதி நிறுவனங்கள் எங்கள் கடன் பத்திரங்களை மதிக்கின்றன. ஏனைய சர்வதேச நிதி நிறுவனங்களிடமிருந்து மிகக் குறைந்த வட்டியில் கடன் உதவி பெறுவதற்கான பின்னணி உருவாக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மீண்டும் இலங்கை மீது நம்பிக்கை வைப்பர். பரந்த அளவிலான சர்வதேச வாய்ப்புகளுக்கான கதவுகள் எங்களுக்காக திறக்கப்படும். வலுவான புதிய பொருளாதாரத்தை உருவாக்குவதற்கான அடித்தளம் தயாராகி வருகிறது.

நாம் ஒரு புதிய பயணத்தைத் தொடங்குகிறோம். மேலும் பல பொருளாதார சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இங்குதான் நமது வெற்றிக்கான அடிப்படை இருக்கிறது. இவற்றில் சில மறுசீரமைப்புகளை, 2022 இடைக்கால வரவு - செலவுத் திட்டம் மற்றும் 2023 வரவு - செலவுத் திட்டங்களில் முன்மொழிந்து ஏற்கனவே செயல்படுத்தி வருகிறோம். நாங்கள் இன்னும் பல மறுசீரமைப்புகளை அறிமுகப்படுத்துவோம். அவற்றுள், சில முக்கியமான விடயங்களை நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

2025 ஆம் ஆண்டுக்குள் முதன்மை பற்றாக்குறையை மொத்த தேசிய உற்பத்தியில் 2.3வீதமாக குறைப்பது, 2026 ஆம் ஆண்டுக்குள் அரச வருமானத்தை மொத்த தேசிய உற்பத்தியில் 15வீதமாக உயர்த்துவது, வற் வரிக்கு அளிக்கப்பட்டுள்ள விலக்குகளை படிப்படியாகக் குறைத்து, அதனை திரும்ப செலுத்துவதை துரிதப்படுத்துதல், எஸ்வற் முறையை இரத்து செய்தல், 2025 இல் குறைந்தபட்ச வரி விலக்குடன், சொத்து வரி முறைக்கு பதிலாக செல்வ வரியொன்றை விதிக்கவும், பரிசு, பரம்பரை சொத்து வரியொன்றை அறிமுகப்படுத்தவும் நடவடிக்கை எடுத்தல் - முறையான செலவு முகாமைத்துவம் மூலம் அரச செலவினங்களுக்கான ஒதுக்கீட்டை அதிகரித்தல், முதன்மை வரவு செலவுத் திட்ட கையிருப்பு வரம்பிற்குள் பணவீக்கத்துக்கு ஏற்ப, ஊதியங்கள், ஓய்வூதியங்களை ஒழுங்குபடுத்துதல்

2023 ஆம் ஆண்டின் இடைப் பகுதியில், பணவீக்க விகிதத்தை ஒற்றை இலக்க மதிப்பிற்குள் குறைத்தல், பணம் அச்சிடுவதை படிப்படியாகக் குறைத்து, வரவு செலவுத் திட்ட பற்றாக்குறையை ஈடுசெய்ய, கடன் பெற்றுக்கொள்ளாமல் வருமானத்தை அதிகரித்தல்

அந்நிய செலாவணி, கட்டுப்பாடுகள், விதிமுறைகள் படிப்படியாக நீக்கப்பட்டு, அந்நியச் செலாவணி சந்தையின் செயற்பாடுகள், சந்தை அளவுகோல்களின் அடிப்படையில் தீர்மானிக்க அனுமதித்தல், தீர்மானிக்கப்பட்ட இலக்குகளுக்கமைய, மத்திய வங்கி வெளிநாட்டு கையிருப்புகளை அதிகரிக்க வெளிநாட்டு நாணயத்தை கொள்வனவு செய்தல்.

இதேவேளை, நல்லாட்சி தொடர்பாக நடைமுறைப்படுத்துவதற்கு உத்தேசித்துள்ள விடயங்களையும் ஜனாதிபதி பாராளுமன்றத்தில் முன்வைத்தார்.

உள்ளூர் நிபுணர்களின் கருத்துகளை உள்வாங்கி, அரசாங்கத்தின் பலவீனங்கள் குறித்த ஐ. எம். எவ். அறிக்கையை தயாரித்தல், ஊழலைத் தடுப்பது தொடர்பாக அரசு, நிறுவன கட்டமைப்பில் உள்ள குறைபாடுகளைக் கண்டறிய வாய்ப்பை ஏற்படுத்துதல், ஐ.நா சாசனத்தின் பிரகாரம், ஊழல் எதிர்ப்பு சட்டங்களை வகுத்தல், இழந்த சொத்துகளை மீட்பதற்கான ஏற்பாடுகளை 2024 ஆண்டு மார்ச் மாதத்துக்குள் சட்டக் கட்டமைப்பில் உள்வாங்குதல்.

புதிய அரச நிதி முகாமைத்துவ சட்டத்தை உருவாக்குதலின் கீழ் சலுகை வரி அடிப்படையில், வாகனங்களை இறக்குமதி செய்ய அனுமதி பெற்றவர்களை பொதுமக்கள் தெரிந்துகொள்ளும் வகையில் பகிரங்கப்படுத்துதல், பெருமளவிலான பொது கொள்முதல் ஒப்பந்தங்களின் விவரங்களை பகிரங்கப்படுத்துதல்

எங்கள் கடன் நிலை குறித்து தொடர்ந்து அறிக்கைகள் வெளியிடப்படும். நாட்டின் கடன் பற்றி எந்த தகவலும் மறைக்கப்படமாட்டாது.

ஒவ்வொரு ஆறு மாதங்களுக்கு ஒரு முறை எங்கள் திட்டத்தை மறுபரிசீலனை செய்ய நாங்களும் சர்வதேச நாணய நிதியமும் நடவடிக்கை எடுப்போம். முதல் பரிசீலனை வரும் ஜூன் மாதம் நடைபெறும். தற்போதைய வரி முறையை திருத்துவது குறித்து ஏற்கனவே கவனம் செலுத்தப்பட்டுள்ளது. திருத்தப்பட்ட முன்மொழிவுகளை திறைசேரி தயாரித்து வருகிறது. மேலும், பல்வேறு கல்வியாளர்கள் மற்றும் பொருளாதார நிபுணர்கள் இது தொடர்பான முன்மொழிவுகளை முன்வைத்துள்ளனர். அவர்கள் அனைவருடனும் கலந்துரையாட நாம் எதிர்பார்க்கின்றோம். அதன் பின்னரே பொதுவான உடன்பாட்டை நாம் எட்ட முடியும்.

சர்வதேச நாணய நிதிய ஒப்பந்தம் மீதான பாராளுமன்ற விவாதத்துக்கான திகதியை மார்ச் மூன்றாவது வாரத்தில் நிர்ணயம் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளோம். இதன்போது உங்கள் கருத்துகளையும் உங்கள் அனைவரின் ஆதரவையும் தருமாறு கௌரவ சபையில் கேட்டுக்கொள்கிறோம். (ஐ)

## 33 கோடி...

மாற்றுவதற்கும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் 16 தடவைகள் பெறப்பட்ட நாணய நிதியத்தின் நிதி மத்திய வங்கியின் டொலர் கணக்கில் மட்டுமே வைப்பு செய்ய முடியுமாக இருந்தது என்றும் அவர் குறிப்பிட்டார். நேற்று பாராளுமன்றில் உரையாற் றிய போதே அவர் இந்த விடயத்தைத் தெரிவித்தார். (ஐ)

## உள்நோக்க...

உடன்படிக்கை தொடர்பான உள்நோக்கக் கடிதத்தை சமர்ப்பிக்கவில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ச டீ சில்வா தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் பாராளுமன்றில் சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தை சமர்ப்பித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உரையாற்றினார். இதன் பின்னரே ஹர்ச டீ சில்வா எம். பி. மேற்கண்டவாறு குற்றஞ்சாட்டினார்.

இலங்கை உத்தியோகபூர்வ இருதரப்பு கடனாளர்களுக்கான திறந்த கடிதம், வெளிநாட்டு கடன் சட்டத்தின் கீழ் சிறப்பு அங்கீகாரம் மற்றும் விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் கீழ் நீட்டிக்கப்பட்ட ஒப்பந்தம் ஆகிய ஆவணங்களை மட்டுமே ஜனாதிபதி சமர்ப்பித்துள்ளார்.

நிதி அமைச்சர், மத்திய வங்கி ஆளுநர் கைச்சாத்திட்ட "லெற்றர் ஒவ் இன்டென்ட்" எனப்படும் உள்நோக்கக் கடிதம் மிக முக்கியமான ஆவணம். இது இல்லாமல் ஒப்பந்தம் குறித்து விவாதிப்பது அபத்தமானது.

இந்த உள்நோக்கக் கடிதத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் அவர் கூறினார். (ஐ)

## 33, 000...

நிலையங்களில் நடைபெறவுள்ள இந்த பரீட்சைக்கு 53 ஆயிரம் பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்றில் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், தற்போது நாடளாவிய ரீதியில் ஆசிரியர் இடமாற்றங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதேவேளை, 7,500 கல்வியியல் கல்லூரி ஆசிரியர்களின் பெறுபேறுகள் பரீட்சை திணைக்களத்தால் தேசிய கல்வி நிறுவனத்துக்கு அனுப்பப்பட்டுள்ளன.

அங்கு மீளாய்வு மேற்கொண்டதன் பின்னர் இந்த மாத இறுதிக்குள் பெறுபேறுகள் உத்தியோகபூர்வமாக வெளியிடப்படும். அவர்கள் தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளுக்கு நியமிக்கப்படவுள்ளனர். இதன் மூலம் மாகாண பாடசாலைகளில் நிலவும் வெற்றிடங்கள் பிரச்னை முடிவுக்கு வரும்.

இதற்கு மேலதிகமாக 26 ஆயிரம் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்குவதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. நாளை மறுதினம் சனிக்கிழமை அவர்களுக்கான பரீட்சை நடைபெறவுள்ளது. பரீட்சைக்கான அனுமதிப் பத்திரங்கள் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

பரீட்சை மூலம் பட்டதாரிகளும் கல்வியியல் கல்லூரியில் பயின்றவர்களும் என்று இரு முறைகளில் 33 ஆயிரம் ஆசிரியர்களை பாடசாலைகளில் நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மே மாத நடுப்பகுதியில் இவர்களுக்கான நியமனங்கள் வழங்கப்படும் -என்றார். (ஐ)

## ஐ.எம்.எவ்...

சேர்ந்த இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் கடனைப் பெறுவதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கை கோட்டாபய ராஜபக்ஷவின் காலத்தில் எடுக்கப்பட்டது. வியத்கமவில் இருந்த சிலர் ஜனாதிபதியின் காலை இழுத்து விழுத்தும் செயலையே செய்தனர். உண்மையில், ரணில் விக்கிரமசிங்க மட்டுமே இதனை செய்யக்கூடியவர் என்று பஸில் ராஜபக்ஷ அவரைப் பரிந்துரை செய்தார் என்றும் அவர் கூறினார்.

(ஐ)

## மின்சாரம்...

இதன்போது, அவர் பயன்படுத்திய இரும்புக் கம்பி ஒன்று வீட்டின் பிரதான மின்வடத்தில் சிக்கியதில் அவர் மின்சார தாக்குதலுக்கு இலக்கானார்.

மின்சாரம் பாய்ந்ததில் இளைஞர் தூக்கி வீசப்பட்டார். அங்கிருந்தவர்கள் அவரை உடனடியாக வல்வெட்டித்துறை பிரதேச மருத்துவமனையில் சேர்ப்பித்தனர். அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார மருத்துமனைக்கு மாற்றப்பட்ட நிலையில் இளைஞர் உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ஐ-02)

## நீர்வீழ்ச்சியில்...

நீராடிக் கொண்டிருந்தபோது நால்வர் காணாமல் போயினர்.

நீண்ட தேடுதலின் பின் னர் நேற்று முன்தினம் இரவு ஒருவரின் சட லம் மீட்கப்பட்டது. தொடர்ந்த தேடுதலில் காணாமல் போயிருந்த ஏனைய மூன்று இளைஞர்களின் சடலங்களும் நேற்று மீட்கப்பட்டன.

கல்முனையை சேர்ந்த மொஹமட் லாபீர் முகம்மது சூரி (வயது 21), கல்முனையை சேர்ந்த அபூபக்கர் ஹனாப் (வயது 21), சாய்ந்தமருதை சேர்ந்த முகம்மது நபீஸ் (வயது 20), சாய்ந்தமருதை சேர்ந்த அஹமட் லெப்பை மொஹமட் அப்சால் (வயது 21) ஆகியோரே இவ்வாறு உயிரிழந்தனர்.

இந்த இளைஞர்களின் அகால மரணத்தைத் தொடர்ந்து கல்முனை, சாய்ந்தமருது பகுதிகளில் அனுதாபத்தை வெளிப்படுத்தும் விதமாக வெள்ளைக் கொடிகள் பறக்க விடப்பட்டுள்ளன.

(ஐ - 01)

## உடலில்...

குழந்தைகள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, உங்களின் உடலில் அடையாளங்கள் இருப்பது தொடர்பில் ஏதேனும் சந்தேகம் இருப்பின், தேசிய மருத்துவமனையின் மத்திய தொழு நோய் சிகிச்சை நிலையத்தின் 075 408 8604 என்ற இலக்கத்துக்கு வட்ஸ் அப் செய்தியை அனுப்புமாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மேலும், நன்கு வெளிச்சம் உள்ள இடத்தில் எடுக்கப்பட்ட சந்தேகத்துக்கிடமான அடையாளத்தின் தெளிவான ஒளிப்படம், வயது, பாலினம், வசிக்கும் இடம், எவ்வளவு காலம் அந்த புள்ளி அல்லது அடையாளம் உள்ளது எனவும், மற்றும் பிற தொடர்புடைய அறிகுறிகள் (அரிப்பு, எரிச்சல், வலி) தொடர்பான தகவல்கள் குறிப்பிடப்பட வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஐ)

மட்டு. ஈழநாடு
Eelanadu

## சர்வதேச நாணய நிதியத்துடன் 10 நிபந்தனைகளுக்கு இணக்கம்

*கொழும்பு, மார்ச் 23*

சர்வதேச நாணய நிதியத்துடனான 10 நிபந்தனைகளுக்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்த 10 நிபந்தனைகள் பின்வருமாறு:

1. ஏப்ரல் மாதத்தில் கடன் மறுசீரமைப்புத் திட்டத்தை வழங்குதல்.
2. ஊழல் தடுப்புச் சட்டம் கொண்டு வரவேண்டும்.
3. அரசின் வருவாயை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
4. அதிக வருமானம் ஈட்டுபவர்களுக்கு வரி விதிப்பு.
5. 2025 இல் செல்வ வரி மற்றும் சொத்து பரிமாற்ற வரி அறிமுகம்.
6. 2023 இறுதிக்குள் பணவீக்கத்தை 12% - 18% ஆகக் குறைத்தல்.
7. 2023 ஜூன் இல் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாடுகளை நீக்குதல்.
8. அதிக மாற்று விகித நெகிழ்வுத்தன்மை பராமரிக்கப்பட வேண்டும்.
9. மத்திய வங்கி மேலும் சுதந்திரமாக இருக்க வேண்டும்.
10. வலுவான சமூக பாதுகாப்பு வலை அறிமுகப் படுத்தப்பட வேண்டும்.

(அ)

## டொலர், தங்கம் விலை வீழ்ச்சி!

*கொழும்பு, மார்ச் 23*

இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்டுள்ள நாணய மாற்று விகிதங்களின்படி அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 312.61 ரூபாவாகவும் விற்பனை விலை 330.16 ரூபாவாகவும் பதிவாகி உள்ளது.

இதேவேளை, இலங்கையில் தங்கத்தின் விலையும் நேற்று முன்தினத்தோடு ஒப்பிடுகையில் 10 ஆயிரம் ரூபாவால் குறைவடைந்துள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.

22 கரட் தங்கத்தின் நேற்றைய விலை 151,800 ரூபாவகவும், 24 கரட் தங்கத்தின் விலை 165,000 ரூபாவகவும் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

## அரசியல் கட்சிகளுக்கு இன்று தேர்தல் ஆணைக்குழு அழைப்பு

*கொழும்பு, மார்ச் 23*

தற்போதைய நிலவரத்தை கருத்திற் கொண்டு தேர்தலை திட்டமிட்ட திகதியில் நடத்துவதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது என தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்துவது தொடர்பில் அரசியல் கட்சிகளுடன் கலந்துரையாடியதன் பின்னரே இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளை இன்று வியாழக்கிழமை தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அழைத்து இது தொடர்பில் கலந்துரையாடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் கூறினார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்கப்பு 28ஆம் திகதி முதல் 31ஆம் திகதி வரையில் இடம்பெறவுள்ளதாகவும், ஏப்ரல் 25ஆம் திகதி தேர்தல் நடைபெறும் எனவும் முன்னர் அறிவிக்கப்பட்டது.

எவ்வாறாயினும் குறித்த திகதியில் தபால் மூல வாக்களிப்பை நடத்துவதற்கு தேவையான வாக்குச்சீட்டுக்களை விநியோகிக்க முடியாது என அரச அச்சகம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக தேர்தலை உரிய திகதிகளில் நடத்துவது சிக்கலாக மாறியுள்ளது என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் குறிப்பிட்டார்.

(அ)

# தாமதித்தேனும் நாணய நிதியத்தை நாடியுள்ளமை வரவேற்புக்குரியது!

## கூறுகின்றார் ஹர்ஷ டி சில்வா எம்.பி



*கொழும்பு, மார்ச் 23*

நாட்டை மீட்டெடுப்பதற்காக தாமதித்தாவது சர்வதேச நாணய நிதியத்தை நாடியிருப்பது வரவேற்கத் தக்கது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப் பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

நேற்றைய பாராளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்வைத்த முன்மொழிவுகளுக்கு தெளிவான பதில்களை விவாதத்தின் போது வழங்குவதற்கு எதிர்பார்க்கின்றோம்.

நாங்கள் அனைத்தையும் எதிர்க்கவில்லை.

ஜனாதிபதி பாராளுமன்றத்துக்கு வருவதற்கு முன்பு இந்த சபையில் அப்போதைய அரசாங்கத்துக்கு ஒரு விடயத்தை நாம் வலியுறுத்தினோம்.

அதாவது நாட்டை நெருக்கடிகளிலிருந்து மீட்டெடுப்பற்கு சர்வதேச நாணய நிதியத்தை நாடுமாறு கோரினோம்.

தற்போதே சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடலை ஆரம்பியுங்கள். நாடு வங்குரோத்து அடையாது என்று கூறினோம்.

எமது கட்சியின் தலைவர் கூறியதை போன்று உடன்படக்கூடிய பல விடயங்கள் இருக்கின்றன. நாம் இல்லை என்று கூறவில்லை.

நாம் காழ்ப்புணர்ச்சி கொள்ளவில்லை.

தாமதித்தாவது சர்வதேச நாணய நிதியத்தை நாடியிருப்பது மகிழ்ச்சிதான். அதனை நாம் வரவேற்கின்றோம்.

இந்த நிலைப்பாட்டை மாற்றுவதற்கு ஜனாதிபதி எடுத்த முயற்சிகளையும் நாம் வரவேற்கின்றோம்.

சாதாரண மக்கள் துயரப்படும் தருணம் இதுவாகும். அந்த நிலைமையை நாம் மாற்றியமைக்க வேண்டும்.

எனவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் விசேட உரைதொடர்பிலான விவாதத்தில் நாம் ஆக்கப்பூர்வமாக பங்கேற்போம் என்பதை சபைக்கு தெரிவித்துக் கொள்கின்றேன்-என்றார்.

(அ-கே)

# ஜனாபதி ரணிலின் உரைக்கு விவாதம் கோரிய எதிர்க்கட்சி!

*கொழும்பு, மார்ச் 23*

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் விசேட உரை தொடர்பான முழுமையான விவாதத்தை நடத்துமாறு எதிர்க் கட்சி நேற்று பாராளுமன்றத்தில் கோரியது.

நேற்றைய பாராளுமன்ற அமர்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விசேட உரையை ஆற்றியிருந்தார்.

அவரது உரையை தொடர்ந்து கருத்துரைத்த எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையை முழுமையான விவாதத்துக்கு உட்படுத்துவதற்கு நேரத்தை ஒதுக்குவதற்கு சபாநாயகர் அனுமதி வழங்க வேண்டும்.

அதேபோன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் விசேட உரைக்கு பதில் அளிப்பதற்கு இன்றைய (நேற்று) தினமே எனக்கு கால அவகாசத்தை வழங்குமாறும் கோரிக்கை விடுக்கின்றேன்.

தற்போது (நேற்று) அதற்கான சந்தர்ப்பத்தை வழங்க முடியாவிட்டாலும் விவாதம் ஆரம்பிக்கப்படும்போது முதலாவது சந்தர்ப்பத்தை எனக்கு வழங்குமாறு கோருகின்றேன்.

இதற்கு பதிலளித்த ஆளுங்கட்சியின் பிரதம கொறடா அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, குறித்த விவாத்தை இன்றைய (நேற்று) தினமே நடத்துவதற்கு ஆளுங்கட்சி தயாராகவே உள்ளது. இதற்கு சபை உடன்படுகின்றதா?-என்றார்.

இதன்போது ஆளுங்கட்சியின் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் உடன்பட்டனர்.

இதன்போது கருத்துரைத்த எதிர்க் கட்சித் தலைவர்,

“விவாத்துக்கு செல்ல எதிர்க் கட்சியும் தயாராகவே உள்ளது என்றார்.

இதன்போது கருத்துரைத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

“பாராளுமன்றத்தில் விவாதம் என்பது ஒரு நோக்கத்துக்காக நடத்தப்பட வேண்டும்.

இரு பக்கங்களும் வெவ்வேறு கருத்துக்கள் பரிமாறப்பட்டு எவ்வாறு ஒன்றிணைந்து வேலைத் திட்டங்களை முன்னெடுப்பது என்பது தொடர்பில் விவாதம் நடத்தப்பட வேண்டும். இதன்போது தேசிய சபையை சந்திப்பதற்கும் என்னால் முடியும்“ என்றார்.

இதன்போது மீண்டும் கருத்துரைத்த எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, “ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்றைய (நேற்று) தினமே விவாதத்தை நடத்துமாறு அழைப்பு விடுத்துள்ளார். விவாதத்துக்கு எதிர்க்கட்சித் தயாராகவே உள்ளது.

இந்த விவாதத்தினூடாக ஒன்றிணைந்து பயணிப்பதற்கான அவகாசம் ஏற்படலாம்.

ஒன்றிணைந்து பயணிக்கக்கூடிய இடங்களில் ஒன்றிணைந்து பயணிக்க முடியும். மாற்று யோசனைகளை முன்வைக்கக்கூடிய இடங்களில் மாற்று யோசனைகள் முன்வைக்கலாம். மீண்டும் பின்னால் நோக்கி பயணிக்க வேண்டாம். எனவே இன்றிலிருந்தே விவாதத்தை ஆரம்பிபபோம்.

நாம் தயாராக இருக்கின்றோம்-என்றார்.

இதன்போது மீண்டும் கருத்துரைத்த ஆளுங் கட்சியின் பிரதம கொறடா சுசில் பிரேமஜயந்த,

“ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் இன்று (நேற்று) மிகவும் தெளிவான பதில்கள் வழங்கப் பட்டன. கடந்த ஆறு, மாதங்களுக்கு முன்பிருந்த நெருக்கடிகள் உள்ளிட்ட சகலவிடயங்களையும் முன்வைத்தே நேற்றைய தினம் பதிலளிக்கப்பட்டது.

சர்வதேச நாணய நிதியத்தால் கிடைக்கப்பெற்ற ஒத்துழைப்பு, அதனூடன் தொடர்புபட்ட தரப்பினர், அதன் உடன்படிக்கைகள் என சகல விடயங்களும் இன்று சபைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

இன்றைய தினம் திட்டமிடப்பட்டுள்ள பாராளுமன்ற நடவடிக்கைகளுடன் இந்த விவாதத்தையும் நடத்த முடியும். அதில் எவ்வித சிக்கலும் இல்லை - என்றார்.

(அ)

# ஐ. எம். எவ். கடனை பெறுவதற்கு எதிர்க்கட்சி ஒத்துழைக்கவில்லை!

## அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ

*கொழும்பு, மார்ச் 23*

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து அரசாங்கம் பெற்றுக் கொள்ளும் கடன் தொடர்பில் ஒருபோதும் எதிர்க்கட்சியினரின் ஒத்துழைப்பு கிடைக்கவில்லை என சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று புதன்கிழமை பாராளுமன்றத்தில் உரை நிகழ்த்தியதன் பின்னர் அதனைப் பாராட்டி குமார வெல்கம எம். பி. சபையில் முன் வைத்த கூற்றுக்களுக்கு பதிலளிக்கும் வகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து அரசாங்கம் பெற்றுக் கொள்ளவுள்ள கடன் விவகாரம் தொடர்பில் ஒருபோதும் எதிர்க்கட்சி தனது ஒத்துழைப்பை வழங்கவில்லை.

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடன் பெற்றுக் கொண்டாலும் அதனை அரசாங்கத்தினால் மீள செலுத்த முடியாது என்றும் எதிர்க்கட்சியினர் கூறினர். இப்போது அவர்களே பாராட்டுகிறார்கள் - என்றும் கூறினார்.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 23.03.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.